விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 27 புதன்கிழமை (10.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 053

# நம்ப முடியாததாலேயே நாம் தலையிட்டுள்ளோம்



## போர்க்குற்ற விசாரணை குறித்து பயண முடிவில் ஹூசைன் கருத்து

(கொழும்பு)

இலங்கையின் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டு நம்பகத்தன்மையற்ற வகையில் நிலையற்றதாக இருப்பதால்தான், போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் அனைத்துலகப் பங்களிப்பு வலியுறுத்தப்பட்டதாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க)

## எம்.பியானார் சரத் பொன்சேகா

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா 4 ஆண்டுகளின் பின்னர் நேற்று மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஆளும் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பின

24ஆம் பக்கம் பார்க்க....


## புற்றுநோய் பாதிப்பு இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் வருடந்தோறும புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருவதை அவதானிக்க முடிவதாக மகரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் சுகாதார சேவை அத

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா # கைதிகள் # பொதுமன்னிப்பு
## ஹுசைனின் பேச்சாளர் விளக்கம்



(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் விரும்பவில்லை என்று ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு அவரது பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் மறுப்பு வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய

23ஆம் பக்கம் பார்க்க....

வடக்கு அமர்வில் பெரும் அமளி

## முதலமைச்சரால் என்னை கட்டுப்படுத்த முடியாது

அவைத் தலைவர் சீ.வீ.கே தர்க்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து மோதலால் நேற்றைய தினம் சபை பெரும் அமளி துமளியாக காணப்பட்டது.

வடக்கு மாகாண அவைத்தலைவரை சர்வாதிகாரி என சிவாஜிலிங்கமும், தன்னை விவசாய அமைச்சர் முடடாளாக்குகின்றார் என சயந்தனும், சிவஞானம் வேண்டு

23ஆம் பக்கம் பார்க்க....

குற்றச்சாட்டுக்கள் பலவற்றுடன்

## வட. விவசாய அமைச்சு மீது விசாரணை கோரி பிரேரணை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசனால் கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்ற பிரேரணை நேற்றைய தினம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும் விவசாய அமைச்சர் தன் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு நேற்றைய தினம் சபையில் எந்த பதிலும வழங்கவில்லை.

உறுப்பினர் லிங்கநாதனால் நேற்றைய அமர்வில்

23ஆம் பக்கம் பார்க்க....

## செங்கோலுடன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தம்மை சுயாதீன கட்சியாக அங்கீகரிக்குமாறு கோரி, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய நிலையில், சபை மத்தியில் செங்கோலை தூக்கிக்கொண்டு ஒன்றிணைந்த எதிர்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நாடாளுமன்ற செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா தீர்மானத்தை அமுலாக்க வலியுறுத்து

ஹுசைன் - கூட்டமைப்பு சந்திப்பில்

(கொழும்பு)



ஐ.நாவின் இலங்கை மீதான தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரி

24ஆம் பக்கம் பார்க்க....

## ‘முதலமைச்சரே விசாரிக்கட்டும்’ - கே.சயந்தன்

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாணவிவசாயஅமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரே விசாரணை செய்ய வேண்டுமென வட மாகாண சபையின் ஆளுங்கட்சி

23ஆம் பக்கம் பார்க்க....

## காணி அபகரிப்பில் அரசு அசமந்தம்; ஐ.நாவின் பதில் நம்பிக்கையளிக்கும்

வடக்கு அமர்வில் விக்னேஸ்வரன் கருத்து

(யாழ்ப்பாணம்)


வடக்கில் நடைபெற்று வரும் இராணுவத்தின் காணி அபகரிப்பு தொடர்பில் மத்திய அரசிற்கு நாம பல தடவைகள் கூறி வருகின்ற போதிலும் அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமல் மௌனமாகவே இருந்து வருவதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இது தொடர்பில் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளரிடம் எடுத்து கூறியுள்ளோம். அவர் நல்ல பதிலை தருவார் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் நாற்பத்து ஐந்தாவது அமர்வு கைதடியில அமைந்துள்ள பேரவை செயலகத்

24ஆம் பக்கம் பார்க்க....

## “சாதிக்க வேண்டிய என்னை ஏன் சாகடித்து விட்டீர்கள்”

இப்படிக்கு பா.சுவஸ்திகன்
(விபத்தில் உயிரிழந்த மாணவன்)






(யாழ்ப்பாணம்)

கடந்த 3-ம் திகதி பலாலி வீதி தபால்பெட்டிச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்திருந்த பொஸ்கோ பாடசாலை மாணவன் பா.சுவஸ்திகன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தி

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நகைக் கடையில் மின் ஒழுக்கு



(யாழுப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் மின் ஒழுக்கு சம்பவம் ஏற்பட்டதில் கடையில் சிறு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் சிறுபொருட் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் மின் ஒழுக்கு ஏற்பட்டவுடனே யாழ் மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் பெரியளவில் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை எனவும் கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார். (செ-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி மார்ச்சில் யாழில்

(யாழ்ப்பாணம்)

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கில் கனடாவில் வாழும் சிவராசா பாலராஜாவின் அனுசரணையிலும் நேரடி வழிநடத்தலிலும் ஆங்கில எழுத்துக்கூட்டல் (Spelling Bee Competition) போட்டி எதிர்வரும் மார்ச் மாதமளவில் நடைபெறவுள்ளது.

வட அமெரிக்க கண்டத்தில் மிகப் பெரிய அளவில் நடத்தப்படும் இப்போட்டி யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக இடம்பெறவுள்ளது.

8 வயது தொடக்கம் 10 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும் 11 வயது தொடக்கம் 13 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும் 14 வயது தொடக்கம் 16 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும் 17 வயது தொடக்கம் 20 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும் என நான்கு பிரிவுகளாக இப்போட்டி இடம்பெறவுள்ளது.

இப்போட்டிக்கான சொற்தொகுதிகளை marumalarchy.org என்ற மறுமலர்ச்சி மன்ற இணையத்தளத்திலோ அல்லது காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மன்ற அலுவலகத்தில் இருந்தோ பெற்றுக்கொள்ள முடியும் என மறுமலர்ச்சி மன்றம் அறிவித்துள்ளது. (இ-5)

## விருந்தோம்பல் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விருந்தோம்பல் கற்கைநெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர் என்பவற்றை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சியின் முடிவில் இலங்கையின் முன்னணி ஹோட்டல்களில் வெளிக்கள பயிற்சியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் தேசிய தொழில் தகைமை சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கற்கைநெறிகளுக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று யாழ். வீரசிங்கம் மண்டபம் (1ம் மாடி) இல் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் காலை 10.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் கல்விச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-5)

## ஞானசார தேரருக்கு பிணை கிடைத்தும் விடுதலையாகவில்லை

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொது பல சேனாவின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரரை ஹோமகம நீதிமன்றம் நேற்று பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில், ஹோமகம நீதிமன்றத்தினால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து. பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த ஞானசாரீ தேரரை கடந்த மாதம் 26ஆம் திகதி விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து, அவர் வெலிக்கடச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

அதன் பின்னர், ஞானசார தேரருக்கு பிணை வழங்கக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுக்களையும் ஹோமகம நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

நேற்றுடன் விளக்கமறியல் காலம் முடிந்து, ஞானசார தேரர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவரை தலா ஒரு இலட்ச ரூபா பெறுமதியான இரண்டு பேரின் ஆட்பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி அளித்தார்.

அதேவேளை, சந்தியா எக்னெலி கொடவை அச்சுறுத்திய குற்றச்சாட்டில், இன்றுவரை ஞானசார தேரரை விளக்கமறியலில் வைக்க ஹோமகம நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால் அவர் மீண்டும் வெலிக்கடச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (செ-11)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்விஅறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் "தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் அலுவலர்களுக்கான சுற்றுலா விடுதியாகப்" (Circuit Bungalow) பயன்படுத்தக்கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீட்டுக்கான விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

01.விலைக்கேள்வியானது கீழ்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

02.வீட்டின் அமைவிடமானது யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்து 02 கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்தினுள் இருத்தல் வேண்டும்.

03.குளியலறை வசதிகள் மற்றும் தளபாடங்கள் ஏனைய வசதிகளைக் கொண்ட தங்குவதற்கேதுவான ஐந்து அறைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

04.வாகனங்கள் சென்று வரக்கூடிய போக்குவரத்து வசதியினையும் குறைந்தது இரண்டு வாகனங்கள் தரித்து நிற்கக் கூடிய தரிப்பிட வசதியினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

05.மேற்குறித்த நிபந்தனைகளுடன் கீழ்வரும் விபரங்களையும் உள்ளடக்கியதாக தங்களது கேள்வி ஆவணம் அமைதல் வேண்டும்.

I.விண்ணப்பதாரர் பெயர்
II.ஆதன உரிமையாளர் பெயர், தொலைபேசி இல (வதிவிடம், கையடக்க தொலைபேசி)
IIIஆதன உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் போட்டோப் பிரதி
IV.அறைகளின் எண்ணிக்கையும் விஸ்தீரணமும் (சதுர அடியில்)
V.கட்டட அமைவு வரைபடம் (இருப்பின்)
VI.மாவட்டச் செயலகத்திலிருந்து குறிப்பிட்ட ஆதனத்திற்குச் செல்வதற்கான பாதை வரைபடம்.
VII.தங்களால் மாதமொன்றுக்கு எதிர்பார்க்கப்படும் வாடகை.

06.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

07.மூடி பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 24.02.2016ந் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.

08.கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 24.02.2016ந் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

09.கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி-3734)

## செல்பி எடுத்த ஹூசைன்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இளவரசர் செயிட் அல்-ஹூஸைன் நேற்று எதிர்க்கட்சித் தலைவரை சந்திக்க வந்த பொழுது, புகைப்பட ஊடகவியலாளர்களுடன் அளவளாவினார்.

அத்துடன் தனக்கும் புகைப்படம் தொடர்பில் ஆர்வம் இருப்பதை தெரிவிக்கும் வகையில் கமெராவை கையில் எடுத்த அவர், ஊடகவியலாளர்களை படம் எடுத்ததோடு அவர்களோடு செல்பியும் (Selfie) எடுத்துக் கொண்டார். (செ-11)

**விற்பனைக்கு**

10KV Lister England டீசல் ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு

தொடர்பு:-
0772242394 (3548)

**யாழ்.வணிகர் கழகம் வருடாந்த பொதுக் கூட்டம்**

2016ஆம் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது.

திகதி:-12.03.2016 சனிக்கிழமை
நேரம்:-காலை 9.30 மணி
இடம்:-யாழ்.வணிகர் கழகப் பணிமனை
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்
யாழ்.வணிகர் கழகம்

(சி-3725)



## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

# பெண் பிரதிநிதித்துவ அதிகரிப்புக்கு ஆதரவு

(கொழும்பு)

**பெண் பிரதிநிதித்துவம் 25 வீதத்தால் அதிகரிக்கப்படும் என்ற சட்டமூலத்தை தாம் வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா இதனைத் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் பெண்களில் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டு, அது உறுதி செய்யப்பட வேண்டும் என மாவை சேனாதிராசா கூறியுள்ளார்.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பல பெண்கள் இருப்பதாகவும், அவர்களின் பிரதிநிதித்துவமும் அதிகரிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற சபை நடவடிக்கைகளை குழப்பும் வண்ணம் செயற்படுகின்றமை பெண்களுக்கு எதிராக செயற்படுகின்ற செயற்பாடு எனவும் அவர் கூறியுள்ளார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் இந்த செயற்பாட்டை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பெண்களின் பிரதிநிதித்துவ அதிகரிப்பிற்கு அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டியது அவசியம் எனஅவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சட்டமா அதிபர் நியமனத்தில் அரசியல் அழுத்தம் கிடையாது

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

எவ்வித அரசியல் அழுத்தங்களும் இன்றி சுயாதீனமான முறையில் சட்டமா அதிபர் நியமிக்கப்படுவார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதியினால் மூவரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களைப் போன்று நபர்களையோ அல்லது பதவிகளையோ முன்னிலைப்படுத்தி சட்டமா அதிபர் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட மாட்டார் என பிரதமர் கூறியுள்ளார்.

உரிய நடைமுறைகளின் பிரகாரமே சட்டமா அதிபர் நியமனம் இடம்பெறும் என பிரதமர் ரணில் உறுதியளித்துள்ளார்.

சட்டமா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின்னர், அது குறித்து விவாதிக்க பாராளுமன்றத்தில் இடமளிக்கவும் தயாராகவுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். (இ)

## ரயில் விபத்துக்களில் மூன்று பேர் உயிரிழப்பு

பேலியகொட, வெள்ளவத்தை மற்றும் அம்பன்பொல ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ரயில் விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களனிப் பகுதியிலுள்ள ரயில் கடவையை, துவிச்சக்கரவண்டியில் கடக்க முற்பட்டவேளை 64 வயதுடைய முதியவரை, கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில் மோதி அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள ரயில் கடவையைக் கடக்க முயற்சித்த 49 வயதுடைய நபரொருவர், மாத்தறையிலிருந்து கண்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில் மோதி உயிரிழந்துள்ளார்.

மேலும், கொன்கடவெல, அம்பன்பொல ரயில் ஓடு பாதையில் தனிமையில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த 50 வயதுடைய நபரொருவர், அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில் மோதி, நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## மின்சாரசபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் கொழும்பில் நேற்று வாகன நெரிசல்




இலங்கை மின்சார சபை ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

கொழும்பு மின்சார சபை தலைமையகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட பேரணி, விஹாரமகாதேவி பூங்காவை நோக்கி சென்றது.

தற்காலிக அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும், மின்சார சபை ஊழியர்களுக்கு உரிய சலுகைகள் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியினால் கொம்பனித்தெரு, யூனியன் பிளேஸ் உள்ளிட்ட பகுதிகளில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. (இ)

## யோஷிதவை பார்வையிட்ட கலைஞர்கள்

சி.எஸ்.என். தொலைக்காட்சி விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷவை பார்வையிட கலைஞர்கள் வெலிக்கடை சிறைச்சலைக்கு நேற்று சென்றுள்ளனர்.

இதன்போது யோஷித உட்பட ஏனையோர் கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கல் என கலைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

கலைஞரான ரொஹான் வெலிவிடவின் கைதானது, கலைஞர்களை அவமதிப்பது போன்று உள்ளது என தாம் கருதுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

சி.எஸ்.என் தொலைக்காட்சி ஊழியர்களை பழிவாங்கும் நோக்கில் இந்த அரசாங்கம் செயற்படுவது தவறு. இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களை இந்த அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

கலைஞர்களுக்கான சுதந்திரம் முழுமையாக வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர். (இ)

## நிஸாந்த ரணதுங்கவுக்காக போராடத் தயாராகும் அர்ஜுன

சி.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பான விசாரணைகளில் அந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான நிஸாந்த ரணதுங்க நிதி குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ளார்.

இந்நிலையில் தனது சகோதரருக்காக தான் போராடத் தயாராக இருப்பதாக நிஸாந்தவின் சகோதரரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க நேற்று முன்தினம் அவரது சகோதரரின் கைது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார். மேலும் நிஸாந்த என்னுடைய சகோதரர். ஆகவே எனது சகோதரருக்காக நான் பேச முன்வந்துள்ளேன். சட்டம் தனது கடமையைச் செய்ய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. ஆனால் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு சரியாக செயற்படவில்லை.

எனினும் எனது சகோதரர் கைது தொடர்பாக நான் இதுவரை ஜனாதிபதியுடனோ, பிரதமருடனோ பேச்சுவார்த்தைக்கு செல்லவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எம்மவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் யாருடன் இணைந்து செயற்பட்டால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்று அதற்கான சிறந்த உதாரணம் தான் இன்று நிஸாந்தவின் கைது என்றும் அர்ஜுன தெரிவித்தார். (இ)

## பிரசாந்தனின் விளக்கமறியல் 23ஆம் திகதி வரையில் நீடிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரன் ஆகியோரின் விளக்கமறியல் 23ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆரையம்பதியில் இடம்பெற்ற இரட்டைக்கொலை தொடர்பில் காத்தான்குடி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்த பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரர் ஹரன் ஆகியோர் நேற்றுக் காலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி காத்தான்குடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (இ)

# நெல் கொள்வனவு முறைமையில் விவசாயிகள் நட்டம் அடைவு!

## வடக்கு அமர்வில் நேற்று சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க கூட்டுறவுத் துறை மூலமோ அல்லது விவசாயத் திணைக்களத்தின் மூலமோ நெல்கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், வவுனியா மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனினால் பிரேரணை சமர்பிக்கப்பட்டது.

அதில், வடக்கு மாகாணத்தில் தற்போது நெல் அறுவடை நடைபெறுகின்றது. நிர்ணய விலையில் முன்னைய அரசினால் நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

அரச அதிபர்களுக்கு இதற்குரிய நிதி வழங்கப்பட்டு அவை கூட்டுறவுச் சங்களின் ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்டன.

ஆனால் தற்போது இது நிறுத்தப்பட்டுள்ளது. அரசினால் நெல்கொள்வனவு நிர்ணய விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், கொள்வனவு இடம்பெறவில்லை. இதனால் விவசாயிகள் தென்பகுதியிலிருந்து வரும் தனியாருக்கும், இங்குள்ள தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் மிகக் குறைந்த வலையில் கொடுக்கின்றனர். ஒரு மூடை நெல் ஆயிரத்து 500 ரூபாய் வரையிலேயே கெள்முதல் செய்யப்படுகின்றது.

இதனால் விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க கூட்டுறவுத் துறை மூலமோ அல்லது விவசா யத் திணைக்களத்தின் மூலமோ நெல் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்று லிங்கநாதன் கேட்டுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் கமலேஸ்வரன், பிரேரணையை வழிமொழிந்து கருத்துத் தெரிவிக்கையில், இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டது என்றார்.

பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், இதனை விவசாய அமைச்சின் ஊடாக மேற்கொள்வதற்கு, நெல்லைக் கொள்வனவு செய்ய நிதி போதாது. எனவே வடக்கு முதலமைச்சர் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் முதலமைச்சர் தொலைநகல் அனுப்ப வேண்டும். கடந்த காலங்களைப் போன்று அரச அதிபர்களுக்கு, நிர்ணய விலையில் கொள்வனவு செய்வதற்குரிய நிதி ஒதுக்கப்பட வேண்டும்.


இன்னும் 20 தொடக்கம் 25 நாள்களுக்குள் இவை இடம்பெறா விட்டால், விவசாயிகள் மிகக் குறைந்த விலைக்கு நெல்லினை தனியாருக்கு வழங்கிவிடுவார்கள்.

இதனால் விவசாயிகள் மிகப் பெரிய நட்டத்தை அடைவார்கள் என்றார்.

விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன், இதனைப் பிரேரணையாக இல்லாமல் ஆலோசனையாக ஏற்கலாம் என்று தெரிவித்தார்.

ஏனெனில் இது பிரேரணையாக நிறைவேற்றப்பட்டால், விவசாயிகள் நாளை சகல கூட்டுறவுச் சங்கங்கள் முன்பாகவும் நிற்பார்கள். எனவே, இதனை ஆலோசனையாக முன்வைக்கலாம்.

மேலும், கடந்த காலங்களில் அரச அதிபர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய கடன்களை அவர்கள் திருப்பச் செலுத்தவில்லை. இதனால அரச அதிபர் நிதி வழங்க பின்னடிக்கின்றார்கள் என்றார். (செ-4)



# அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 39ஆவது சிரார்த்த தினம் நேற்று



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரான அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 39-வது சிரார்த்தினம் நேற்றைய தினம் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், தமிழ் தேசிய மக்கள் முன் னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்படபலர் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (செ-9)

# ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் ஐ.நா. ஆணையாளர் சந்திப்பு





(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற் கொண்டிருந்த ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் நேற்று காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

முதலில் பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்த ஐ.நா மனித உரிமை ஆணையாளர், சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவது மற்றும் மனித உரிமைகளைக் காப்பதில் தற்போதுள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தி னார்.

அதையடுத்து, ஜனாதிபதி செய லகத்தில், அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதியின் வெளி விவகார ஆலோசகரும், கிழக்கு மாகாண ஆளுனருமான ஒஸ்ரின் பெர்னான்டோ, வெளி விவகாரச் செயலர் சித்ராங்கனி வகீஸ்வரா, செயலர் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். (செ-12)

# வீதி ஒழுங்கை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைக்கு விசேட குழு

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

**முறைப்பாட்டு தொ.பே:- 021 222 5000**

யாழ்.மாவட்டத்தில் வீதிஒழுங்குகளை நடைமுறைப்படுத்தவும் ஒழுங்குகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் விசேட குழு ஒன்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதிஒழுங்கு முறைகளை மீறிவாகனங்களை செலுத்துவதால் ஏற்படும் உயிரிழப்புகளால் மிகவும் வேதனை அளிக்கின்றது.

வீதி ஒழுங்கு முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகளும், தனியார் போக்குவரத்துதுறை தலைவர்களும் கலந்துகொண்டனர்.

அக் கலந்துரையாடலில் நேர அட்டவணைகு ஏற்ப பேருந்துசேவைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆளுநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொது மக்களுக்கு எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படாமல் சேவைகளையும் அதற்கான ஒழுங்குகளையும் மேற்கொள்ள வேண்டும் எனஅவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவேவெகு விரைவில் இரு பகுதியினரையும் அழைத்து பொதுவான நேர அட்டவணையை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

மேலும் தனியார் போக்குவரத்து சேவையில் வீதிஒழுங்குமுறையை பின்பற்றாமல் வாகனங்களை செலுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்களுடைய வாகன அனுமதிப் பத்திரத்தையும் இரத்து செய்வதாக அறிவித்துள்ளோம்.

வீதி ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மோட்டார் திணைக்களமும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அதில் ஒழுங்கு விதிமுறைகளை மீறி செல்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வீதி ஒழுங்கு முறைகளை மீறிசெயற்படுபவர்கள் மற்றும் பேருந்துகளில் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக 021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்கமுடியும்.

மேலும் போருந்துகளிலும் முறைப்பாட்டு இலக்கங்களை காட்சிப்படுத்துமாறு தெரிவிக்கவுள்ளோம்.

இச் செயற்பாடுகள் தொடர்சியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

# ஏப்ரல் 15ஆம் திகதிக்கு முன்னதாக கட்டண மீற்றர் பொருத்தப்படவேண்டும்

## ஆட்டோ சாரதிகளுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் அனைத்திலும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கட்டண மீற்றர்மாணி பொருத்தப்பட வேண்டும்என யாழ்மாவட்ட அரச அதிபர்நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.


யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளில் கூடுதலான கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும் இதனால் பொதுமக்கள் பலர் பாதிப்படைந்துள்ளதாகவும் எமக்கு பலமுறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே இது தொடர்பாக முச்சக்கரவண்டி சங்கங்களுடன் கலந்துரையாடியுள்ளோம். அவர்கள் கட்டண மீற்றர் மாணி பொருத்துவதற்கு ஒருகாலக்கேடு வழங்கக்கோரி யிருந்தனர். இதன் படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி க்கு பின்னர் கட்டண மீற்றர்மாணி பொருத்தப்படாத முச்சக்கரவண்டிகள் மீதுசட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# சிவாசார்ய அபிஷேக அழைப்பிதழ்

(குருப் பட்டாபிஷேக விழா)



பேரன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான மன்மத வருஷம் தை மாதம் 27 ஆம் நாள் (10.02.2016) புதன்கிழமை இன்று காலை 07.00 மணி முதல் 8.30 மணி வரையான சதய நட்சத்திர மீனலக்ன சுபவேளையில் எமது ஏக புத்திரன்,
பாரத்வாஜ கோத்ரம்

## பிரம்மஸ்ரீ கந்ததாசக் குருக்கள் கஜேந்திர சர்மாவுக்கு

## சிவாசார்ய அபிஷேகம்

தர்ம சாஸ்தா, ஞானவேலாயுதசுவாமி, வற்றாப்பளைக் கண்ணகையம்மன் திருவருளும், குருவருளும், பெரியோர்களின் ஆசியும் கூடிவர வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துக்களுடன் குடும்ப சமேதராக வருகை தந்து ஆசீர்வதித்தும், ஆசி பெற்றும் எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### தீக்ஷாகுரு:

பிரம்மஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்
பிரம்மஸ்ரீ மஹாதேவ. ஸ்ரீவத்ஸாங்கக் குருக்கள்
தர்மசாஸ்தா குருகுலம், ஸ்ரீ கண்ணகை அம்மன் தேவஸ்தானம், இணுவில்.

### இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ சிவ.கந்ததாசக் குருக்கள்
ஸ்ரீமதி சேஷம்மா. பவாநிதி
ஸ்ரீமதி லோஜினி கஜேந்திரசர்மா

**வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயம்,**
**முள்ளியவளை, முல்லைத்தீவு. தொ.பே.021 320 8862**

(சீ-3729)

# 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை விஸ்தரிப்பு விசேட திட்டம்

## வட பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில் வடகிழக்கில் 3 வருட கால தூரநோக்கு செயற்றிட்டத்தின் கீழ் 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை மரங்களை விஸ்தரிப்பு செய்யும் விசேட திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட கிழக்கில் அழிவடைந்த தென்னை மரங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். கடந்த காலங்களில் வருடத்துக்கு 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு இலட்சத்து90ஆயிரம் தென்னை மரங்களை நாட்டும் இலக்குடன் செயற்றிட்டங்கள் நடைபெற்று வந்தன. ஆனால் அத்திட்டத்தினூடாக அனைத்துப் பயனாளிகளினதும் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

வட கிழக்கில் தென்னைப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கென 88ஆயிரத்து 790 ஏக்கர் நிலப்பரப்பு காணப்படுகின்றது.

எனவே எமது புதிய செயற்றிட்டத்தின் கீழ் 3 வருட காலத்தில் எமது இலக்கை அடைவதற்காக 38 ஆயிரத்து 600 ஏக்கர் நிலப்பரப்பை புதிய தென்னை நாற்று நடுகை செய்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

இத் திட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து தென்னை விதைகளை கொள்வனவு செய்து நாற்று மேடை அமைத்து தென்னம் நாற்றுக்கள் மானிய அடிப்படையில் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் அச்சுவேலியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வள்ளிபுனம் மற்றும் தேவிபுரத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் பகுதியிலும் வவுனியாவில் செட்டிகுளம் பகுதியிலும் நாற்று மேடைகள் அமைக்கப்படவுள்ளன. அங்கிருந்து பயனாளிகளுக்கான தென்னம் நாற்றுக்கள் வழங்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்னம் நாற்றுக்களை நடுகை செய்வது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள கற்பகதரு சங்கங்களின் ஊடாகவும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தில் இணையவுள்ள பயிர்ச் செய்கையாளர்கள் தத்தமது பிரதேசங்களுக்குரிய தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்த பின்னர் உத்தியோகத்தரால் நேரடி விஜயம் மேற்கொள்ளப்பட்டு தென்னை பயிரிடப்படவுள்ள பகுதியைப் பரிசீலனை செய்து உறுதிப்படுத்திய பின்னர் அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படும்.

தூரநோக்குடைய இத் திட்டத்தின் இலக்கை அடைவதன் மூலம் தென்னை உற்பத்தியை வட கிழக்கில் ஊக்குவித்து சிறந்த பயனை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் கலந்துகொள்வதுடன்கௌரவ விருந்தினராக அருட் திரு.போல் றோகன் அடிகளார் கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர்திருமதி.வ.கதிரேசபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி தாரிணி குருபரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக திருமதி. பத்மராணி சிவஞானராசா, திருமதி. யசோதரா ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி.நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி. வி.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்து கொள்வதுடன் பரிசில்களை திருமதி.பாமா தெய்வேந்திரராஜா வழங்கி வைப்பார். (இ-5)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

யாழ்.சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் தா.கணேச பாலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி விமலாஇரும்பக உரிமையாளரும் தாதிய உத்தியோகத்தருமான த.ஜெயந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி மட்டுவில் ஆயுள்வேத வைத்தியர் திருமதி.புஸ்பராணி லியோன், மட்டுவில் சந்திரபுரம் கிராம சேவையாளர் க.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## வர்த்தக பிணக்கு குறித்து பயிற்சி

ஊர்காவற்றுறை, பளை ஆகிய பிரதேச செயலக பிரிவிலுள்ள மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான வர்த்தக பிணக்குகள் தொடர்பான 3 நாட்கள் கொண்ட பயிற்சிப்பட்டறைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியிலுள்ள யாழ்.மிலேனியம் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. (இ-5-134)

## திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் நடத்தி வருகின்ற பன்னிரு திருமுறை முற்றோதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ண மூர்த்தி அறிவித்துள்ளார்.

தைமாதம் முதல் மார்கழி மாதம் வரை காலை, மாலை என் திருமுறைகள் முற்றோதப்படும். (இ-5)

## அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் கருத்தறியும் அமர்வுகள் 15, 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

அரசியல் சீர்திருத்துங்கள் குறித்து பொதுமக்கள் கொண்டுள்ள யோசனைகளை முன் மொழிவதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மீதான பொது மக்கள் யோசனைகள் குழு செயலகத்தினால் நடத்தப்படவுள்ள பொது மக்களுக்கான மாவட்ட அமர்வுகள் எதிர் வரும் 15,16 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கின்ற இவ் அமர்வுகள் இரண்டு நாட்களும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30மணிவரைநடைபெறவுள்ளது.

இவ் அமர்வுகளில் பொது மக்கள் பங்குபற்றி அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீது கொண்டுள்ள யோசனைகளை முன்மொழிய முடியும்.

பொது மக்கள் ஒவ்வொருவரும் தமது வாய்மொழி மூலமான தமது யோசனைகளை குழுவிற்கு எடுத்துரைக்கும் போது அது தொடர்பான எழுத்து மூலமான பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இருபது உறுப்பினர்கள் கொண்ட இக் குழுவானது அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவானது அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 011 243 7676, 077 386 8563 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் Constitutional Reforms@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்பு கொள்ள முடியும்.

நேரடி விபரங்களுக்கு தவிசாளர், அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொது மக்கள் யோசனைகள் குழு செயலகம், விசும்பாய, ஸ்ரோபிள்ஸ் வீதி, கொழும்பு-02 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-5)




# அம்பன் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி இல்லை

## 4 மாதங்களாக திருத்தப்படுகிறது

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி கடந்த 4 மாத காலமாக இல்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இவ் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்ததால் அதனைத்திருத்துவதற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் திருத்தம் செய்வதற்கு அனுப்பப்பட்டு 4 மாதங்கள் கடந்தும் இதுவரை அம்புலன்ஸ் வண்டி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படவில்லை. இதனால் நோயாளர்கள் பலதரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களில் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அல்லது யாழ்.போதனா வைத்தியசாலை என்பவற்றுக்கு அனுப்பப்பட வேண்டும். இத்தேவைக்கு இவ் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி இல்லை.

இதனால் இங்குள்ள நோயாளர்களை அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லும் போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டிகளே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்தகைய சேவையினால் நோயாளர்கள் தினமும் அவதிப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நோயாளர் ஒருவரின் அவசர சிகிச்சையின் பொருட்டு அம்புலன்ஸ் வண்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட இடைவெளியில் நோயாளிக்கு ஏதேனும் உயிராபத்து ஏற்பட்டு விடும் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பின்தங்கிய பிரதேசத்தில் காணப்படும் அம்பன் அரசினர் வைத்தியசாலைக்கு உடனடியாக அம்புலன்ஸ்வண்டி ஒன்றை வழங்கி உதவுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

## ரயில் கடவையை அவதானமாக பயணிகள் கடக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மருதனார்மடம் பகுதியில் காப்பாளரின் அசட்டையீனம் காரணமாக ரயில் கடவையை கடக்க முற்பட்ட வாகனம் ஒன்றை ரயில் மோதித்தள்ளிய சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதேவேளை வீதியில் செல்லும் பயணிகள் ரயில் கடவையினை கடக்க முற்படும் போது மிகவும் அவதானமாக செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மருதனார்மடப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி அதிகாலை கொழும்பில் இருந்து காங்கேசன் துறை நோக்கி வந்த இரவு தபால் ரயில் மோதியதில் மரக்கறிகளை ஏற்றி வந்த பட்டா வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச் சம்பவம் அதிகாலை 4.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மதவாச்சி பகுதியில் இருந்து மருதனார்மட சந்தைக்கு மரக்கறிகள் ஏற்றி வந்த வாகனமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளானது.

ரயில் வருவது தெரிந்தும் காப்பாளர் ரயில் கடவையினை மூட மறந்துள்ளமையே இவ் விபத்துக்கு காரணம் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இச் சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்-2016

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.10 ஆம் திகதி முதல் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், வடமாகாணஉள்ளூராட்சிஅமைச்சின் செயலாளரின் 2015.11.11 ஆம் திகதிய NP/05/01/US/VA.FL/APP/06 ஆம் இலக்க கடிதத்திற்கு அமைவாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட NP/14/1/ET/Un.Sche/Appoint/34/Palai PS ஆம் இலக்க 2015.11.23 ஆம் திகதிய கடிதத்திற்கமைவாகவும் கீழ் குறிப்பிடப்பட்ட பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

01.இப்பதவிநிரந்தரமானதும்,ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.

02.ஊழியர்விதவைகள்/தபுதாரர்கள்,அநாதைகள்ஓய்வூதியத்திற்குபங்களிப்புச்செய்தல்வேண்டும்.

03.நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

02.விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களை கொண்டவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

03.நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையரராகவும் இருத்தல் வேண்டும்.

04.விண்ணப்பதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் விண்ணப்ப இறுதி தினத்தன்று 05 வருடங்களுக்கு குறையாத காலப்பகுதி தொடர்ச்சியாக வசித்துவருபவராகவும் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடசான்றிதழ்/வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிநேர்முகப் பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01.பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின்தலைமைஅலுவலகத்தில் ரூபா 100.00 ஐ செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

02.விண்ணப்பத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்டும்.

03.விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **"செயலாளர்,பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,பளை"**என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

04.தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின்பெயர் எழுதப்படுதல் வேண்டும்.

05.ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் நிறுத்தப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி**

2016.02.24 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குமுன்பாகவோ எமக்குகிடைக்க கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**வெற்றிடமாகவுள்ள பதவி**

01.காவலாளி(ஆண் மட்டும்)(வெற்றிடம் 02)

**கல்வித்தகைமை**

கல்விப்பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஒரே தடவையில் ஐந்துபாட சித்தி உட்பட ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2006 –A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 11,730-120X10-130X10-145X10145X10-160X12-17600 என்ற சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

மோ.அருள்சோதி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,- பளை.

(சி-3730)


## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை சந்தி அருகில் காணியும், வயல் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-077 115 5584

(3538)



## SPOKEN ENGLISH CLASSES

(Group/Personal) 3 மாதத்தில் ஆங்கிலம சரளமாக பேச கற்பிக்கப்படும்.

தொடர்பு:-077 035 7307

(3538)



## யா/புற்றளை மகா வித்தியாலயம்-புலோலி

அழைப்பிதழ்... **புதிய வகுப்பறைத் திறப்பு விழா**

(சி-3721)

காலம்: 10.02.2016 புதன்கிழமை முற்பகல் 11 மணி, தலைவர்: திரு.ஆ.சிவநாதன் (அதிபர்)

கலந்து சிறப்பிப்போர்:

கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ச.சுகிர்தன் (பழைய மாணவன்)

கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.க.தர்மலிங்கம்

கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.வே.சிவயோகன்

கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.M.K. சிவாஜிலிங்கம்

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.நந்தகுமார்



**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்** (C-8781) **பாடசாலைச் சமூகம்**



## Institution of Professional Development for Teachers

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 5 ஆம் தர தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வும் சுய கற்றல் கையேடு வெளியீடும்-2016**

**காலம்:-** 14.02.2016 ஞாயிறு காலை 8.30 மணி 3.30 மணி

**இடம்:-** யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி

**தொடர் 01**

**அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சையில் எழுத்து மூல பரீட்சை**

★ஒப்பீட்டுக்கல்வி

★கல்வி முகாமைத்துவம் (விடய ஆய்வு) .

★பொது அறிவும் நுண்ணறிவும்

★கிரகித்தல் ஆகிய வினாத்தாள்களுக்கான பயிற்சிப் பயிலமர்வு

நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களின் சேவை.

★பேராசிரியர் மா.சின்னத்தம்பி ★பேராசிரியர் க.தேவராஜா

★கலாநிதி த.கலாமணி ★கலாநிதி பா.தனபாலன்

★கலாநிதி செ.சேதுராஜா ★கலாநிதி நி.நல்லையா

★திரு. க.இ.கமலநாதன் ★திரு.பா.மகாலிங்கசிவம்

★திரு. J.J.பேனாட் ★திரு ப.சசிகுமார்

விசேட வழிகாட்டல்கள்,சுயகற்றல் குறிப்புக்கள், முன்னைய பரீட்சை வினாத்தாள், மாதிரி வினாத்தாள் பயில்வுகள், கலந்தாய்வுகள், சமர்ப்பிப்புக்கள், பரீட்சைகள் என நவீன கல்விப் பிரயோகங்கள்...

**"பங்குபற்றுபவர்கள் முன்கூட்டியே தொலைபேசியில் பதிவுகளை மேற்கொள்ளவும்''**

விரைவில் மன்னார், வவுனியாவில் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகளுக்கு:

திரு S.ராஜ்மோகன்

கிங்ஸ் கல்லூரி, மன்னார்.

தொலை.பே. 077 503 8842

கலாநிதி பா.தனபாலன் (பணிப்பாளர்)

ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவகம்

தலைமைச் செயலகம், துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

தொ.பே.:-077 068 1958

பயிற்சி:- முயற்சி-ஈடுபாடு-சுயகற்றல்-வெற்றி

அன்றைய தினம் விநியோகிக்கப்படும் நூல்கள்:

கலாநிதி பா.தனபாலனின் -கல்வியியலில் விடய ஆய்வு

**ஒபபீட்டுக் கல்விப் பிரயோகங்கள், பாடசாலை திட்டமிடலும் முகாமைத்துவம், ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகள், உட்படுத்தல் கல்வி.**

(சி-3726)


## இராசி பலன்

10.02.2016

(தை 27, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
துதியை மாலை 5.52 மணிவரை
சதயம் பிற்பகல் 4.00 மணிவரை
சுபநேரம் 5.04-6.34 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம்-மகம் | | |
| சூரி புத | | | குரு ராகு |
| சுக் | சனி | செவ் | |

**மீனம்** துரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவலொன்று வந்து சேரலாம்.

**இடபம்** அரசு வழிச்சலுகைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறலாம்.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், புதிய திட்டங்கள் கைகூடும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உன்னை விட்டு விலகுவர், திருடர் பயமுண்டு.

**மகரம்** ரோக பயமுண்டு, காணாமற்போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிம்மம்** கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், புதிய நபர்களில் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப காரியச் செலவுகள் ஏற்படலாம், கௌரவமான நாள்.

**துலாம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி** நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் கலந்து கொள்வர், கௌரவமான நாள்.

# முல்லைத்தீவில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு நியாயமான அடிப்படையில் காணிப்பங்கீடு

## முல்லை. கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டில் தீர்மானம்

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் நியாயமான அடிப்படையில் காணிகளை வழங்கி மீள்குடியேற்றம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**



முல்லைத்தீவில் மீள் குடியேற்றம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல்நேற்று முன்தினம் மு.ப 10 மணிக்கு முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில்எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், முல்லைத்தீவில் காடழிப்பில் யாராவது ஈடுபட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தனிப்பட்ட முறையில் யாரும் காடழிப்பு நடவடிக்கையில் ஈடுபடமுடியாது.

அத்துடன் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு காணிகள் வழங்குவதை நிறுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் காணிகள் அற்ற குடும்பங்களுக்கு விரைவாக காணிகளை வழங்கி மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கும்ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் காணிக்கு உரித்துடையவர்களுக்கு அவர்களுடைய காணிகளை மீட்டுக் கொடுப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான மஸ்தான், சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் மாகாண சபைஉறுப்பினர்களான து.ரவிகரன், கமலேஸ்வரன், ஜெனோபர் உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-281)

# திருநகர் வீதியில் துர்நாற்றம்



(முக்கொம்பன்)

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருநகர் பிரதான வீதியில் மஞ்சுளா வெதுப்பகத்திற்கு அண்மித்த பகுதியில் கழிவுநீர் தேங்கி நிற்பதனால் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் அப்பகுதியினூடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள், மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (3-283)




# காணாமற்போன உறவுகளின் பிரதிநிதிகளை நேரடித் தொடர்பிலிருக்குமாறு கூறிய ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளர்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் வடக்குக் கிழக்கு மாகாண சங்கங்களின் பிரதிநிதிகளை தம்முடன் நேரடித் தொடர்பிலிருக்குமாறு ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளதாக வவுனியா பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் வடக்கு கிழக்கு மாகாண சங்கங்களின் (FSHKFDR - North East) பிரதிநிதிகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பின்போது, கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பான உள்நாட்டு செயன்முறைகளிலும், உள்நாட்டு ஆணைக்குழுக்களிலும் தாம் நம்பிக்கை இழந்தவர்களாக உள்ளதாகவும், 'நிலைமாறு கால நீதி வழங்கல் செயற்பாட்டு முன்னெடுப்புகள் யாவும் இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், பரிகார நீதியே தமது காயங்களுக்கு சிறந்த நிவாரணியாக அமையும் என்று தாங்கள் உணர்வதாகவும் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனிடம் வலியுறுத்தினர்.

ஆட்கடத்தல் மற்றும் தடுத்துவைத்தல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் சமகால பிரச்சினைகள், குறைகள், தேவைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்ட ஆணையாளர், தம்முடன் நேரடி தொடர்பிலிருக்குமாறு கூறி தனது விருந்தினர் (Visiting Card) அட்டையை சங்கங்களின் பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

ஆணையாளருடனான சந்திப்பில், கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் வடக்கு கிழக்கு மாகாண சங்கங்களின் (FSHKFDR - North East) சார்பில் திருமதி ஜெ.நாகேந்திரன், திருமதி அமலி, திருமதி செல்வராணி ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-281)

# பண்டிவிரிச்சான் பாடசாலைக்கு குடிநீர்த்தாங்கி நிறுவப்பட்டது





மன்னார் பண்டிவிரிச்சான் பாடசாலைக்கு அமைத்துக்கொடுக்கப்பட்ட குடிநீர் தாங்கியை மாணவர்களின் பாவனைக்கு கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பண்டிவிரிச்சான் பாடசாலைக்கு குடிநீர் தாங்கி அமைப்பதற்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார். கடந்த ஆண்டு இத் திட்டம் நிறைவேற்றப்பட்ட நிலையில், அந்த நீர்த்தாங்கியை மாணவர்களின் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலைக்கு விஜயம் செய்த வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன, மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி ,மடு வலய கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் இணைந்து குடி நீர் தாங்கியை திறந்து வைத்தனர். (3-281)

# இன, மத, மொழி பேதமின்றி பணியாற்றிய காதர் கௌரவிப்பு



வவுனியாவில் எஸ்.கே. காதரின் சமூக சேவையைப் பாராட்டி சமூக ஆர்வலர்கள் மற்றும் வர்த்தகர்களால் வவுனியா றோயல் காடின் விருந்தினர் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியிலும் பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வவுனியா மாவட்டத்தில் இன, மத, மொழி பேதங்களைக் கடந்து எல்லோரும் ஐக்கியமாக வாழ வழிகாட்டியிருந்தார். இவரது இச் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கி வவுனியாமாவட்ட சமூக ஆர்வலர்கள் மற்றும் வர்த்தகர்களால் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பாராளு மன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வர்த்தக சங்க தலைவர் ரி. இராஜலிங்கம், ஆசிரிய ஆலோசகர் சு.ஜெயசந்திரன், இறை பணிச் செம்மல் வை. தேவ ராசா, சமூக ஆர்வலர்களான எஸ்.சபா, ஞானம் ஐயா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (3-250)

# அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்தது

(குருமன்காடு)

வவுனியா, நெடுங்கேணி வைத்தியசாலைக்குரிய அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்துள்ளமையால் அப்பகுதி அவசர நோயாளர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா, நெடுங்கேணி வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்ட அம்புலன்ஸ் வண்டி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் புளியங்குளம் வைத்தியசாலையில்உள்ள அம்புலன்ஸ் வண்டியே நெடுங்கேணி அவசர நோயாளர்களையும் ஏற்ற வேண்டியுள்ளது.

புளியங்குளம் வைத்தியசாலையில்உள்ள அம்புலன்ஸ் வண்டியே பாலமோட்டை, ஓமந்தை ஆகிய வைத்தியசாலைகளுக்கு செல்லும் அவசர நோயாளர்களையும்ஏற்றுவதால்நெடுங்கேணி வைத்தியசாலைக்கு அவசர நோயாளர்கள் செல்கின்ற போது உடனடியாக இவ் அம்புலன்ஸ் வண்டி செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (3-250)

# 35 கி.மீ.வீதி எப்போது செப்பனிடப்படும்?

கிளிநொச்சியிலிருந்து கோணாவில்,ஸ்கந்தபுரம்,ஆனைவிழுந்தான்,வன்னேரி, ஜெயபுரம் வரையான பிரதானவீதியானது இதுவரை புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். பாடசாலை, வைத்தியசாலை ஆகியவற்றுக்காக அக்கரையான் பிரதேசத்திற்கும் தமது ஏனைய தேவைகளுக்காக கிளிநொச்சி நகருக்கும் செல்லவேண்டியுள்ளதால் சுமார் ஒன்றரை மணித்தியாலத்தில் செல்ல வேண்டிய இடத்திற்கு மூன்றரை மணிநேரம் பேருந்தில் பயணம் செய்யவேண்டியுள்ளது. மேலும் 45 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியின் 10 கிலோமீற்றர் தூரம் செப்பனிடப்பட்டுள்ளது. ஏனைய 35 கிலோமீற்றர் நீளமான பகுதி செப்பனிப்படாதுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தலையிட்டு விரைவாக வீதியை செப்பனிடுவதற்கு ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-299)

# கேப்பாபுலவில் இராணுவத்தினரிடமுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி வடமாகாண சபையில் தீர்மானம்

## உறுப்பினர் ரவிகரன் பிரேரணையை முன்மொழிந்தார்

முல்லைத்தீவு கேப்பாபுலவில் இராணுவம் பிடித்து வைத்துள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும என வலியுறுத்தியும், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதான வீதியை விடுவிக்க வலியுறுத்தியும் வடக்கு மாகாண சபையில் தீர்மானம ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆளும்கட்சி உறுப்பினர் ரவிகரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணையே நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நாற்பத்தைந்தாவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நேற்றைய தினம் பேரவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரேரணையை முன்மொழிந்த ரவிகரன் உரையாற்றுகையில்,

போர் நிறைவடைந்து ஆறு வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் கேப்பாபுலவு மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. பொன் விளையும்பூமி போன்று அந்த மண்ணில் அம் மக்கள பூரிப்பாக வாழ்ந்த காலங்களை எண்ணிப்பார்க்கின்றேன்.

ஜனநாயக நாடு தானே என்று எண்ணி அறவழிப் போராட்டங்கள் பலவற்றை அம்மக்கள் நடத்தி விட்டார்கள். முன்னைய அரசும் கண்டு கொள்ளவில்லை. தற்போதைய நல்லாட்சி என்று சொல்லப்படும் ஆட்சியிலும் இது கண்டு கொள்ளப்படவில்லை. மீள்குடியேற்றம் செய்யப்படாதது மட்டுமல்ல பிரதான பாதையை மூடியும் வைத்துள்ளார்கள்.

அடர்ந்த காட்டின்வழியே பாதுகாப்பற்ற இடத்தில் பாதை அமைத்து நாளாந்தம் பயணிக்கும் மக்கள் பயந்த நிலையில் பயணிக்கின்றார்கள். தனியாக பெண்கள் செல்வதற்கு அச்சப்படுகின்றார்கள். துணையுடன் செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. பாதையை திறந்து நல்லெணத்தை காட்டி குடியிருப்பு காணிகளையும் விடுத்து அந்த மக்களை சொந்த இடத்தில் மீள்குடியேற்ற வேணடும்.

கடந்த வாரம் அந்த மக்கள் என்னை அழைத்து தாங்கள் உண்ணாவிரதம் இருந்து படிப்படியாக தங்களை மாய்த்து கொள்வதே இறுதி முடிவு என்று கூறினார்கள். அவர்களின் மண் மீதான பற்றைப் பாராட்டி அவசர முடிவு எடுக்க வேண்டாம். உங்களுடைய நியாயமான இக்கோரிக்கைகளை வடக்கு மாகாண சபை அமர்வில் கொண்டு வருகின்றேன். என ஆறுதல் கூறினேன்.

மாற்று இடத்தில் தற்காலிகமாக குடியிருத்தி விட்டு அந்த மக்களை இன்றுவரை ஏமாற்றி கொண்டு இருக்கின்றார்கள். அந்த மக்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற முதலமைச்சர் முயற்சி எடுக்க வேண்டும் என கேட்டு கொள்கின்றேன் என ரவிகரன் தெரிவித்தார். (3-4)




## கிளிநொச்சி மாவட்டத்தில் மரதன் ஓட்டத்தில் சாதனை



(உருத்திரபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 2016ஆம் ஆண்டிற்கான அரை மரதன் ஓட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக வீரன் இளங்கீரன் அனுஜன் உருத்திரபுரம் மகா வித்தியாலயம் சார்பில் கலந்து கொண்டு முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டதுடன் மாவட்டத்தில் இது வரை இருந்த சாதனையை முறியடித்துள்ளார்.

இதுவரை ஒரு மணித்தியாலமும் 18 நிமிடங்களும் ஆக இருந்த நிலையில் இவர் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களில் குறித்த தூரத்தினை அடைந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். (3-298)

## உள்ளக வாய்க்கால்கள் சீரின்மையால் வீண்விரயமாகும் சிறுபோக நீர்ப்பாசனம்

### ஜெயந்திநகர்,சிவநகர் விவசாயிகள் ஆதங்கம்

கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்புக் குளத்தின் மத்திய வகுப்பு காணிகளுக்குரிய வாய்க்கால் திருத்த வேலைகள் நடைபெற்றுள்ள போதிலும் தலா ஒன்றரை ஏக்கர் அளவுகளைக் கொண்ட 119 விவசாயக் காணிகள் ஜெயந்தி நகரிலும் 236 விவசாயக் காணிகள் சிவநகரிலும் உள்ளன. இவற்றிற்கான பிரதான மற்றும் உள்ளக வாய்க்கால்கள் திருத்தம் செய்யப்படாத நிலையிலேயே இருப்பதால் இப்பகுதி விவசாயிகள் தமக்கான நீர்த்தேவையைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் கஷ்டமடைவதாகக் கவலை தெரிவிக்கின்றனர். இந்த வருடத்திற்கான சிறுபோக நெற்செய்கை இரணைமடுக் குளத்தின் கீழ் இல்லாத நிலையில் புதுமுறிப்புக் குளத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு எதிர்கால விதைநெல் தேவையையும் எதிர்நோக்க வேண்டிய நிலை உள்ளது.

இந்த நிலையில் இக்குளத்தின் கீழ் நெற்செய்கையை மேற்கொள்ளும் சிறு விவசாயிகள் காலம காலமாக சிறுபோக நீர்ப்பாசனத்திற்கு சண்டையிடுவதுடன் வாய்கால்கள் சீரின்மையால் நீர் வீண்விரயமாகும் நிலையும் ஏற்பட்டு வருவதாகத் வெரிவிக்கினறனர். அத்துடன் சிறுபோக நெற்செய்கையின் போதும் பெரும்போக நெற்செய்கையின் போதும் வாய்க்கால் வெட்டுவதற்கென கமக்கார அமைப்பினரால் விவசாயிகளிடமிருந்து பணம் அறவிடப்படுகின்ற போதிலும் சீரான முறையில் வாய்க்கால்கள் வெட்டப்படுவதில்லை.

குறிப்பாக அண்மைக் கால வெள்ளப்பெருக்கினால் புதிதாக அமைக்கப்பட்ட சிவநகர் வயல்களின் 12, 13, 14, 15,16ஆம் வாய்க்கால்களும் இவற்றிற்கான நீர்விநியோகம் செய்யப் பயன்படும் புதிய பிரதான வாய்க்காலும் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த வாய்க்கால்களை உடனடியாக புனரமைப்புச் செய்ய இக்காலப்பகுதியே பொருத்தமானதாகும். இதனை விடுத்து சிறுபோகச் செய்கை ஆரம்பிக்கும் காலப்பகுதியில் வாய்க்கால் வேலையை ஆரம்பித்து விவசாயிகளை மேலும் துன்பமடைய வைக்கவும் சண்டையிட வைக்கவும் நடவடிக்கை எடுக்காமல் விவசாயிகளின் நன்மை கருதி கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத்திணைகளத்தினரும் உரிய கமக்கார அமைப்பினரும் விரைந்து நடவடிக்கை எடுத்து இந்த சிறுபோக நெற்செய்கையிலாவது நல்ல முறையில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் நீர் வீணவிரயமாவதைத் தடுப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென விவசாயிகளால்வேண்டுகோள விடுக்கப்படுகிறது. (3-254)

## வாய்க்காலை மறித்து கிரவல் போட்டதால் தேங்குகிறது நீர்

### முள்ளியவளை சந்தைக்கு அருகில்



முல்லைத்தீவு முள்ளியவளைச்சந்தையை அண்மித்த பிரதான வீதியில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் வேலைகள் சீராகப்பூர்த்தி செய்யப்படாமையினால் அப்பகுதியில் நீர் தேங்கி அயலிலுள்ள காணிகளில் வசிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் நீர் நிலைகளில நுளம்புப்பெருக்கம் அதிகரித்துள்ளதுடன் நோய்த்தொற்றுக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம். இப்பகுதி வர்த்தக நடவடிக்கைகள் நடைபெறும் பகுதியாகும். மேலும் இந்தப் பாலத்தினூடாக நீர் பாய்ந்து செல்லக் கூடிய வாய்க்காலை மறித்து கிரவல் போடப்பட்டுள்ளதனாலே நீர் தேங்கியுள்ளது. இக்கிரவலை அகற்றினால் நீர் வெளியேறும் இக்கிரவலை அகற்றி நீரை வெளியேற்றித்தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் பல தடவைகள் கோரியிருந்த போதும் இதுவரை நடவடடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. எனவே இது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (3-301)

## இணைந்த வடக்குக் கிழக்கில் காணி,பொலிஸ் அதிகாரங்களுடன் அதியுச்ச அதிகாரப்பகிர்வு

### முன்னாள் எம்.பி.சந்திரகுமார் தலைமையில் யோசனைகள் சமர்ப்பிப்பு

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது ஒன்றிணைந்த வடக்கு, கிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட அதியுச்ச அதிகாரப பகிர்வு அவசியம் என கிளிநொச்சியில் சமூக மேம்பாட்டு அமையம வலிறுத்தியுளளது

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் தலைமையில் சமூக மேம்பாட்டு அமையத்தின் உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் மேற்படி புதிய அரசியலமைப்பு யோசனைகள் பெறும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

தேசிய இனங்கள்,அரசகரும மொழிகள்,தேர்தல் முறை,அதிகாரப்பகிர்வு, மலையக மக்களின் சிறப்பு ரிமை (கிளிநொச்சி மாவட்டம்), வளப் பகிர்வு,பொதுச்சேவைகள் எனும் உப தலைப்புக்களில் மேற்படி யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.அந்த யோசனைகளின் சாராம்சம் வருமாறு,

புதிய அரசியலமைப்பானது இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமக்களுடையதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்புடன் எல்லா வகையான பாகுபாடுகளுக்கும் எதிரான உச்சப் பாதுகாப்பை வழங்கும் பொறிமுறைகளைக் கொண்டதாக அமைய வேண்டும்.

இன, மொழி, மத, சாதியக் கட்டமைப்பு, பால்நிலை பாகுபாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டு சுதந்திரம், சமத்துவம், சமூகநீதி, சமூகப்பாதுகாப்பு என்பன ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசியலமைப்பின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

சர்வதேச மனித உரிமைச்சட்டங்களின் அனைத்து சரத்துக்களும் அரசியலமைப்பில் உள்வாங்கப்படுவதன் ஊடாக ஒவ்வொரு தனிமனிதனுடையதும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

உள்வாங்கப்படும் அடிப்படை மனித உரிமைகள் பல்லினத்தன்மை கொண்ட நாடு எனும் அடிப்படையில் நடைமுறையைக் கொண்டிருப்பதற்கான பொறிமுறைகளும், புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் உள்ளடங்கியிருத்தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வடக்குக்கிழக்கு இணைநததான பிராந்திய சபை அரசியலமைப்பு மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும். இச்சபைக்குள் காணப்படும் எண்ணிக்கையிலான சிறுபான்மைத் தேசிய இனங்களின சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்பு உறுதிசெய்யப்படல் வேண்டும்.

அதிகாரப்பகிர்வு தொடரபான விடயங்கள் அரசியலமைப்பில் தெளிவான வியாக்கியானம் உடையவையாக அமைதல் வேண்டும். மயக்கமான கருத்துக்கள், தப்பான மொழி மாற்றத்திற்கான சந்தரப்பங்கள் கொண்டவையாக இவ விடயங்கள் அமையக் கூடாது.

மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து மாவட்டத்தின் சனத்தொகையில் ஏறக்குறைய 45 வீதமான மக்கள் வாழ்கின்றனர். இவரகள தனித்துவமான சமூக, பொருளாதார, கலாசார கட்டமைப்பைக்கொண்டு இருக்கிறனர்.

எனினும் இவர்கள பரந்துபட்ட ஏனைய தமிழ் மக்களின் இனத்துவ அடையாளங்களுடன்வாழ்கின்ற போதும் இவர்களுக்கான தனித்துவம மிக்க அடிப்படை பிரச்சினைகளும், தேவைகளும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார நிலைமைகள், குடியிருக்கும் பிரதேசங்களின் அபிவிருத்தி என்பவற்றில் உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

பொதுமக்களின் பாதுகாப்பிற்காக நாட்டின் இன விகிதாசாரத்திற்கு அமைய வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

பொலிஸ் நியமனங்களின போதும் இன விகிதாசாரங்கள் பேணப்படல் வேண்டும். அவ்வாறே இராணுவம் கடற்படை, விமானப்படை போன்றவற்றின் ஆட்சேர்ப்பு அல்லது நியமனங்களின் போது நாட்டின் இன விகிதாசாரத்திற்கு அமைய நியமனங்கள் செய்வதன் மூலம் நல்லிணக்கத்தையும், பொதுமக்கள் பாதுகாப்பையும் உறுதி செய்யக்கூடிய அரசியலமைப்புத் திருததத்தை வேண்டுகிறோம என தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-254-277)

# பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ இடமாற்றம்




வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குமுகமாகவும் 80 ஆவது ஆண்டில் தடம்பதிக்கும் எமது நிறுவனமான குகன் ஸ்ரூடியோவை 10.02.2016 இன்று முதல் புனரமைக்கப்பட்ட கட்டடத்திற்கு (பருத்தித்துறை துறைமுக முன்புறமாக / கொட்டடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்) இடமாற்றம் செய்து திறந்து வைக்கின்றோம் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

இல.28, பிரதான வீதி,
பருத்தித்துறை.

(3719)

உரிமையாளர்: குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை.
021 226 3218, 077 728 3706



# விண்ணக வாழ்வின் 10 ஆம் ஆண்டு நினைவு



தந்தை மகற் காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்
என்ற பொய்யா மொழியான்
கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எங்களை
ஆளாக்கினீர்கள்...
எங்கே போய்த் தேடுவோம் அப்பா
உங்கள் கனிந்த முகத்தையும்
மென் சிரிப்பையும்...
ஒரு தசாப்தம் அல்ல ஓராயிரம்
தசாப்தம் ஆனாலும் உம்
அன்பும் பாசமும் என்றும்
எம்முடனே நிலைத்திருக்கும்...
இவ்வுலகில்...

(3524)

No.147, New Market,
Jaffna.

உம் நினைவுடன் என்றும் வாழும்
(கம்சனா புடைவையகம்
A.J.M.Textile)

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல் விரைவில் நடக்கும்-கயந்த

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களை அடுத்தவருடம் ஒத்திவைப் பதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளதாக ஊடகங்களில் வெளியா கியிருந்தாலும், எல்லை மீள்நிர் ணயச் செயற்பாடு நிறைவடைந் தவுடன், விரைவில் தேர்தல் நடத் தப்படும் என ஊடகத்துறை அமை ச்சரும் அமைச்சரவைப் பேச்சாள ருமான கயந்த கருணாதிலக தெரி வித்தார்.

அசோக பீரிஸ் தலைமை யிலான ஐவரடங்கிய குழு, எல்லை மீள்நிர்ணய அறிக்கையை உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கையளித்ததைத் தொடர்ந்து, இவ்வருடம் ஜூன் மாதத்தில் நடத்துவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைப் பதற்கு அரசாங்கமோ அல்லது அமைச்சரவையோ எந்தவித முடி வுகளையும் எடுக்கவில்லை என அவர் தெரிவித்தார். இந்தப்பிரச் சினைகள் அனைத்தும் தீர்க்கப் பட்ட பின்னர், தேர்தல் நடத்தப் படும் எனத் தெரிவித்த அவர், உள்ளூராட்சி மன்றங்களில் பெண களின் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதத்தால் அதிகரிப்பது, இத ற்குள் உள்ளடங்குவதாகத் தெரி வித்தார். இக்குழுவின் பரிந்துரை கள், வர்த்தமானியில் பிரசுரிக்க ப்பட்டதன் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர், இறுதி முடிவுகளை எடுப்பர் என வும் அவர் மேலும் தெரிவித்து ள்ளார். (இ)

# மோசடிகள் தொடர்பில் பசில் ராஜபக்ஷவின் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் விசாரணை

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் குறித்து, முன னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பாது காப்பு உத்தியோகத்தரிடம் விசா ரணை நடத்தப்பட்டுள்ளது. பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவினால் இந்த விசா ரணை மேற்கொள்ளப்படடுள்ளது.



விமானப்படைக்குச் சொந்த மான விமானங்கள் பயன் படுத்தப்பட்டமை குறித்து முறை ப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளக விமானப் பயணங்க ளுக்காக விமானப்படைக்குச் சொந் தமான ஹெலிகொப்டர்களை பசில் ராஜபக்ஷ பயன்படுத்தியதாகவும், இதற்காக பல கோடி ரூபா கட்ட ணம் செலுத்த வேண்டியிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பசில் ராஜபக்ஷவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரிடம் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆணைக் குழு வாக்கு மூலம் பதிவு செய்து கொண்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நேற்று கடற்படை சிப்பாய் ஒருவரி டம் விசாரணை நடத்தப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற் காக நியமிக்கப்பட்ட இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், பசில் ராஜபக்ஷவிடம் கடமையாற்றி யிருந்தார்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

முன்னாள் பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் உள்ளக விமானப் போக்குவரத் திற்காக விமானப்படையின் ஹெலி கொப்டர்களை பயன்படுத்தியதாக வும் இதற்காக பெருந்தொகைப் பணம் செலுத்த வேண்டியிருப்ப தாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள் ளது. (இ)

# நிரந்தர நியமனம் வழங்கப்படாமையால் மன உளைச்சலில் சுகாதார தொண்டர்கள்

கிராமிய சுகாதாரத் தொண் டர்களாக (சமூக சுகாதாரத் தொண் டர்கள்)சுமார்6வருடங்களுக்கும்மேலா கப் பணியாற்றிய 22 பேருக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங் கப்படாமையினால், அவர்கள் மிகு ந்த மன உளைச்சலில் உள்ளனர்.

இதேவேளை, GFATM ஆக குறுகிய காலம் பணிபுரிந்த 247 பேருக்கு நிரந்தர நியமனம் வழங் கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தராது தொடர்ந்தும் தம் மைப் புறக்கணித்து வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

1997 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை எந்தவித கொடுப்ப னவுமின்றி சுகாதாரத் தொண்டர்க ளாகப் பணியாற்றிய இவர்கள், அர்ப பணிப்புணர்வுடன் சிறந்த சேவை யாற்றியவர்கள். கிராமங்களில் வீட்டுத் தரிசிப்புச் செய்து கர்ப்பவ திகள், சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் இளவயதுப் பெண்கள் தொடர் பான அனைத்து வேலைத் திட்டங் களையும் சலிக்காது செய்தவர்கள்.

இந்நிலையில், 2006.06.01-2011.08.31 ஆம் திகதி வரை கிராமிய சுகாதாரத் தொண்ட ர்களாக (RHV) 45 பேர் ஒரு மாதப் பயிற்சி பெற்று 3500- 5000 ரூபா வரையான வேதனத்துடன் பொதுச் சுகாதார மருத்துவ மாதர்களின் அனைத்து வேலைகளையும் செய் தனர். தொடர்ந்து 2011- 2012.11.30 ஆம் திகதி வரை கிராமிய சுகா தாரத் தொண்டர்கள் 45 பேரும் புதிதாக 17 பேரும் சமூக சுகாதார ஊக்குவிப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டு, கர்ப்பவதிகள் மற்றும் குழந்தைகள்போசாக்குநிலையை அதிக ரித்தல், வீட்டுத்தோட்டம் அமைத் தல் முதலான செயற்பாடுகளை 6ஆயிரம் ரூபா வேதனத்துடன் அவர கள் தெரிவு செய்யப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை களான தெல்லிப்பழை, சாவக ச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவ ற்றுறை போன்ற இடங்களில் கடமை யாற்றினர். அக் காலகட்டத்தில், இவர்களுககான நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றன. மொத்த மாக 5 நேர்முகப் பரீட்சைகளில் தோற்றிய இவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்குவ தற்குரிய ஆக்கபூர்வ நடவடிக்கை கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் மிகுந்த மன வருத்தத்துடன் தெரிவித்தனர். (இ)

# துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் பலி

மினுவாங்கொடையில், மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 31 வயதான ஆணொருவர் பலியாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறையில் வாடகை வீட்டில் குடியிருந்தவரே இவ்வாறு படுகொலைச்செய்யப்பட்டுள்ளார் என்றும் அதற்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கருவேல்

Botanical Name:Acacia arabica
Family:Leguminosae
Eng: Indian gum arabic tree
Sinh:Babbula



இது 5 மீற்றர் உயரம் வரை வளரும். நடுத்தர அளவுடைய ம்ரம். கிளைகள் நுனியில் பரந்து காணப்படும். இறகு போன்ற தழை கொண்டது. பட்டை கறுப்பு வெடிப் புற்றது. அல்லது நீள்வாக்கில் பிளவு ற்றது. தண்டின் வெளிப்புறக் கட்டை வெண்மையானது. மிருதுவா னது. உட்கட்டை வைரம் கொண் டது. இளஞ்சிவப்பு நிறம் கொண் டவை. இலைகள் இறகுவடிவ கூட் டிலை. இலைக்காம்பு இருமுறை கிளைத்தது. இலையடிச் செதில் முட்களிலானது. மலர்கள் நீண்ட மஞ்சரிக் காம்பில் கோளவடிவ மஞ்சரியாக அமைந்தவை. இலைக் கோணத்தில் 2-5 தலை மஞ்சரி கள் உள்ளன. மணம் கொண் டவை. பொன்னிறமான கனிகள், தட்டையானவை. வெண்மை நிறம் கொண்டது. 8-12விதைகள். கோடை யில் மலரும். பனிக்காலத்தில் கனிகள் தோன்றுகின்றன.

### பரம்பலும் இனவிருத்தியும்

யாழ்.மாவட்டத்தில்குடத்தனைப் பகுதியிலும் நாயன்மார்க்கட்டுப் பிரதேசத்திலும் இம்மரம் காணப் படுகின்றது. இலங்கை, இந்தியா போன்ற வெப்பமான பகுதிகளி லும் காணப்படுகின்றது. விதை கள் மூலம் இனவிருத்தியடையும்.

### மருத்துவப் பயன்கள்

இதன் இலைக்கொழுந்தை அரைத்து கொடிய புண்களுக்கு கட்டினால் துர்நீரை மாற்றும்.

இலைக்கொழுந்தை அரைத்து சீனி கூட்டி நீரில் கலக்கி காலையில் மாத்திரம்உட்கொள்ளஇருமல்தணியும்.

இதன்பட்டையை குடிநீரிட்டு கீழ்க் குடல் வெளிப்படலுக்குக் கழுவும் நீராகவும் பல்லாட்டம், வாய்ப்புண் இவற்றிற்கு கொப்பளிக்கும் நீராக வும் வழங்கலாம்.

இப்பட்டையின் ஊறல் குடிநீர் (பட்டை 1 பங்கு, தண்ணீர் 14 பங்கு) நாட்பட்ட கழிச்சல், நீரிழிவு, காய்ச்சல் போன்ற நிலைகளில் 30-45 மி.லீ. வீதம் கொடுத்து வரலாம்.

இதன்பட்டையை உலர்த்தி பொடி செய்தேனும் சுட்டுகரியாக்கியேனும் பற்களை தேய்த்துவர பல்லாட்டம், பற்களால் இரத்தம் வீரல் என்பன நீங்கும்.

இதன் 3-5 கிராம் எடையுள்ள பிசின் துண்டு ஒன்றை வாயிலிட்டு சுவைத்து அதினின்று ஊறும் இரச த்தை விழுங்கிக் கொண்டிருந்தால் வறட்சி, இருமல், நெஞ்செரிச்சல், தொண்டைநோய்போகும். ஆண்மை பெருகும், அழகையும் வன்மையை யும் உண்டாக்கும்.

இதன் பிசினை முட்டை வெண் கருவுடன் சேர்த்தரைத்து தீப்பட்ட புண்மீது தடவலாம்.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி எனும் பழமொழிக்கமைய கருவேலன் குச்சியினால் பல்துலக்கி வந்தால் பற்கள் நன்றாக உறுதிபடும்.

கருவேலன் மரத்தின் கொழுந்து இலைகளை சேகரித்து நன்றாகக் கசக்கி சாறு எடுத்துஅச்சாற்றில் சம பங்கு நீர் கலந்து இளம் தீயில் காய் ச்சவும். ஓரளவு சுண்டியதும் இறக்கு வதற்கு முன் ஒரு கரண்டி சீனி சேர் த்து ஒரு கொதி விட்டு இறக்கி விட வும். இதை காலை, மாலை வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால் பெண்களுக்கு ஏற்படும்வெள்ளை சாய்தல், இருமல் என்பன தணியும்.

இதன் பட்டைக்குடிநீரை பாலு டன் கலந்து சாப்பிட்டு வந்தால் பேதியை நிறுத்தும். அதிக சீறுநீர் வெளியேறலைச் சீராக்கும்.

கருவேலன் பிசினை சிறு துண் டுகளாக்கி நெய்யில் வதக்கி உட்கொ ண்டு வந்தால் ஆண்மை பெருகும். வீரியம் விருத்தியடையும்.

கருவேலன்பட்டைகளை தூளா க்கி நல்லெண்ணெயில் காய்ச்சி தீப்புண்களுக்கு இட விரைவில் ஆறிவிடும்.


கருவேல மரத்தின் பிஞ்சுக்காய் களை இடித்துவரும் சாற்றை பன ங்கட்டி அல்லது தேனுடன் கலந்து அருந்த பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடு தீரும். அத்துடன் இர த்த விருத்தியையும் ஏற்படுத்தும். கருவேலன் மரத்தின் வேரை குடி நீர் காய்ச்சி கருவேலன் மரத்தின் பிஞ்சையும் பூவையும் நன்றாக இடித்து இக்குடிநீருடன் கலந்து உட்கொண்டு வந்தால் நோய்கள் உடலில் அணுகாது இருப்பதுடன் இரத்த விருத்தியையும் ஏற்படுத்தும்.

கருவேல மரத்தின் பிசினை உலர்த்திப் பொடித்து 1-2 கிராமளவு காலை, மாலை வெந்நீருடன் கொடு க்க நீரிழிவு கட்டுப்படும்.

கருவேலன் கொழுந்தைக் கொண்டு வந்து இலைகளை மட்டும் ஆய் ந்து பாதியளவு சீரகத்தையும் சேர் த்து மைபோல அரைத்து உழுந்து வடை போல தட்டி நடுவில் துளை செய்து வலியுள்ள கண்ணை மூடச் செய்து அதன்மேல் வைத்து அதன் மேல் வெற்றிலையை வைத்து சுத்தமான துணியால் கட்டிவிட வேண்டும். இரவில் கட்டி காலை யில் அவிழ்த்து விட வேண்டும். 3 நாட்கள் செய்ய கண்வலி குண மாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# ரஷ்யாவில் ராணுவ ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கி 4 வீரர்கள் பலி



(மொஸ்கோ)

ரஷ்ய நாட்டு இராணுவத்துக்கு சொந்தமான எம்ஐ-8 ரக ஹெலிகொப்டர் நொறுங்கி விழுந்ததில் 4 வீரர்கள் பலியானதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு ரஷ்யாவின் புஸ்கோவ் பிராந்தியத்தில் வழக்கமான பயிற்சியில் வீரர்கள் ஈடுபட்டிருந்தபோது தரையுடனான தகவல் தொடர்பை இழந்த ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொறுங்கியதாகவும அதில் சென்ற நான்கு வீரர்களும் பலியானதாகவும் பாதுகாப்புத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிககப்பட்டுள்ளது.

மோசமான பராமரிப்பு காரணமாக ரஷ்ய நாட்டு இராணுவத்துக்கு சொந்தமான எம்ஐ-8 ரக ஹெலிகொப்டர்கள் அவ்வப்போது விபத்தை சந்திப்பதும், வீரர்கள் பலியாவதும் அதிகரித்து வருவதாக உள்ளூர் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ)

# கொள்ளையில் ஈடுபட்டவர் முன்னாள் பொலிஸ் அதிகாரி திடுக்கிடும் தகவல் அம்பலம்

பிரித்தானியாவில் ஹட்டன் கார்டன் பாதுகாப்பு பெட்டக நிறுவனத்தில் நடந்த கொள்ளை சம்பவத்தில் தொடர்புடையவர் முன்னாள் பொலிஸ் அதிகாரி என தெரிய வந்துள்ளது.

பிரித்தானியாவில் கடந்த ஈஸ்டர் விடுமுறையின் போது ஹட்டன் கார்டன் பாதுகாப்பு பெட்டக நிறுவனத்தில் அதிர்ச்சியூட்டும் கொளளை சம்பவம் ஒன்று நடந்தது.

கொள்ளையில் ஈடுபட்ட கும்பல் இரண்டு நாட்கள் மேற்கொண்ட கடும் முயற்சிக்கு பின்னர் அந்த பெட்டக நிறுவனத்தில் இருந்து 14 மில்லியன் பவுண்டு மதிப்புள்ள தங்க வைர நகைகளை அள்ளிச் சென்றுள்ளனர்.

இந்த வழக்கில் துரிதமாக செயறபட்ட பொலிஸார் அதில் பெரும்பாலான கொள்ளையர்களை கைது செய்து அவர்களிடம் இருந்து 3.7 மில்லியன் பவுண்டு மதிப்பிலான பொருட்களை மீட்டுள்ளனர்.

இந்த நிலையில் கொள்ளை கும்பலின் முக்கிய தலைவன் தலைமறைவானதை அடுத்து பொலிஸாரால் மேலும் துப்புத்துலக்க முடியாமல் திணறினர்.

பசில் என அறியப்படும் அந்த நபர் குறித்து தகவல் தெரிவிப்பவர்களுக்கு 20ஆயிரம் பவுண்டு வெகுமதி அளிக்கப்படும் எனவும் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இதனிடையே 10 மில்லியன் பவுண்டு அளவுக்கு கொள்ளையிட்டு தப்பிய் பசில் என்பவர் முன்னாள் பொலிஸ் அதிகாரி என தற்போது விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த வழக்கு புதிய திருப்புமுனை நோக்கி பயணிக்க இருப்பதாக விசாரணை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (இ)

# கல்லறைக்குள் உயிருடன் புதைக்கப்பட்ட நபர் அதிர்ச்சியில் பொலிஸார்

பிரேசில் நாட்டில் கல்லறைகுள் நபர் ஒருவர் இரத்தக் கறைகளோடு உயிருக்கு போராடிய நிலையில் கண்டுபிடிக்கபட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசில் நாட்டின் Campos dos Goytacazes நகரில் வசித்து வந்த குடும்பத்தினர், தங்களது உறவினர் கல்லறைக்கு பிரார்த்தனை செய்வதற்காக சென்றுள்ளனர்.

அப்போது. கல்லறை ஒன்று சிறிய அளவில் திறந்து கிடந்துள்ளது, அதனை சென்று பார்த்தபோது, மனிதர் ஒருவர் இரத்தக் காயங்களோடு உயிருக்கு போராடிய நிலையில் கிடந்துள்ளார்.

உடனே இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, விரைந்து வந்த பொலிஸார், அந்நபரை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் நடத்திய விசாரணையில், இந்நபரை கொலை செய்யும் முயற்சியில் அடித்து கல்லறைக்குள் போட்டுள்ளனர் என்று சந்தேகிப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர் சிரியாவை சேர்ந்தவர் என்பதும் தெரியவநதுள்ளது. (இ)

# பனிக்கட்டியின் கீழே சிக்கிய ராணுவ வீரர் உயிருடன் மீட்பு

சியாச்சினில் பனிக்கட்டியின் கீழ் சிக்கிய இராணுவ வீரர் ஒருவர் 6 நாட்களுக்கு பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் வடக்கு சியாச்சின் சிகரத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் அங்கிருந்த இராணுவ நிலை பனியில் புதைந்தது. அங்கு பணியில் ஈடுபட்டு இருந்த தமிழகத்தை சேர்ந்த இராணுவ வீரர்கள் ஏழுமலை, கணேசன், ராமமூர்த்தி, எஸ்.குமார் உட்பட 10 வீரர்கள் பனியில் புதைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களை தேடும்பணியில் இந்திய இராணுவமும், விமானப் படையும் இறங்கியது. மிக உயரமான அந்த பகுதியில் புதிய இராணுவ நிலையும் உருவாக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள இராணுவ வீரர்கள் தேடும் பணியில் உதவியாக இருப்பதுடன், எல்லையை பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார்கள். பல்வேறு நவீன கருவிகள், பனிப் பாறைகளை உடைக்கும் கருவிகள் ஆகியவற்றுடன் மீட்பு படையினர் 24 மணி நேரமும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், பனிச்சரிவில் 25 அடி ஆழத்தில் பனிக்கட்டியின் கீழ் சிக்கிய இராணுவ வீரர், ஆபத்தான நிலையில் உயிருடன் மீட்கப்பட்டார். இது தொடர்பாக வடக்கு பகுதி ராணுவ கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் டி.எஸ். ஹூடா பேசுகையில், “இது அதிசயமானது, காலையில் ஆர்.ஆர். வைத்தியசாலைக்கு லான்ஸ் நாயக் ஹனதப்பாவை கொண்டு செல்ல அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டது,” என்று கூறினார்.

“மீட்பு பணிகள் நடைபெற்று வரும் பகுதியில் தற்போது வரையில் 5 வீரர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு உள்ளன. 4 பேரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உள்ளது.” என்றும் கூறி உள்ளார். வீரர்கள் உயிரிழந்த விவகாரத்தில் தனது துயரத்தையும் வெளிப்படுத்தினார். அதிசயம் தொடரும் என்றும் நம்பிக்கையும் தெரிவித்து உள்ளார். லான்ஸ் நாயக் ஹனன்தப்பா கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவர். ஹனன்தப்பா உயிருடன் மீட்கப்பட்டு உள்ளது அவருடைய குடும்பத்தாருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.(இ)

# இந்தோனேஷியாவில் மதுஅருந்தி 26பேர் பலி

இந்தோனேஷியாவில் இயங்கி வந்த சிறிய மதுக்கடைகளுக்கு கடந்த ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இதனால் அங்கு வீடுகளில் மது தயாரித்து திருட்டுத்தனமாக விற்பனை செய்வது அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் மத்திய ஜாவாவின் யோகியகார்த்தா நகருக்கு அருகே உள்ள ஸ்லெமன் பகுதியில் வீட்டில் தயாரித்த மதுவை விற்பனை செய்து வந்தனர். அவர்களிடம் இருந்து மாணவர்கள் உட்பட பலரும் மது வாங்கி குடித்தனர்.

இந்த மதுவில் விசத்தன்மை கலந்து இருந்ததாக தெரிகிறது. இதனால் அதை குடித்ததும் ஒருவர் பின் ஒருவராக மயங்கி விழுந்து உயிரிழந்தனர். இவ்வாறு 22 பேர் பரிதாபமாக இறந்தனர். இதில் பெரும்பாலானோர் மாணவர்கள் ஆவர்.

இதைப்போல அதே பகுதியில் மது விற்பனை செய்த மற்றொருவரிடம் இருந்து மது வாங்கி குடித்த 4 பேரும் பலியானார்கள்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக வழக்கு பதிவு செய்த பொலிஸார், விசத்தன்மை உடைய மதுவை விற்பனை செய்த 3 பேரையும் கைது செய்தனர். (இ)

# நியூசிலாந்து தலைநகரில் நிலநடுக்கம்

(வெலிங்டன்)

நியூசிலாந்து தலைநகரான வெலிங்டன் நகரின் தென்கிழக்கே சுமார் 35 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள செயிண்ட் அர்நாட் நகரை மையமாக கொண்டு பூமியின் அடியில் 62 கிலோமீற்றர் ஆழத்தில் நேற்று உருவான நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.7 அலகுகளாக பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் பொருட்சேதம் குறித்த உடனடி தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. (இ)

# ஜனாதிபதிக்கு பிடியாணை பிறப்பித்த நீதிபதி கைது!



மாலைதீவு ஜனாதிபதியாக அப்துல்லா யாமீன் அப்துல் கயூம் பதவி வகித்து வருகிறார். இவர் அரசு பணத்தை கையாடல் செய்ததாக புகார் எழுந்துள்ளது. அது குறித்த வழக்கு மாலைதீவு உச்ச நீதி மன்றில் விசாரணைக்கு வந்தது.

வழக்கை நீதிபதி அகமது நிகான் விசாரித்தார். பின்னர் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு பிடியாணை பிறப்பித்தார்.

அதை தொடர்ந்து நீதிபதி அகமது நிகானை மாலைதீவு பொலிஸார் கைது செய்தனர். மேலும் முன்னாள் அரசு சட்டத்தரணி முக்தாஸ் முஷினும் கைதானார்.

ஜனாதிபதி மீது தொடரப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்கு தொடர்ந்து அதற்காக பிடியாணை பிறப்பித்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையே கைது செய்யப்பட்ட முன்னாள் அரசு சட்டத்தரணி முக்தாஸ் முஷின் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் நீதிபதி அகமது நிகான் உயர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு 7 நாட்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதற்கு முன்பு கடந்த 2012ஆம் ஆண்டு முதன் முறையாக உச்ச நீதிமன்ற நீதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி முகமது நஷீத் ஆட்சியில் கைது செய்யப்பட்டார். அவருக்கு தற்போது கைது செய்யப்பட்டு 13 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது 2ஆவது நீதிபதி நிகான் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

# எயிட்ஸுடன் வாழ்பவர்களில் 40சதவீதமானோர் பெண்கள்

## இந்தியாவில் மட்டும்

இந்தியாவில் எச்.ஐ.வியுடன் வாழ்பவர்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் என்பது தெரியவந்துள்ளது. இந்தியாவில் 2030ஆம் ஆண்டுக்குள் எயிட்ஸை முழுமையாக ஒழித்துக்கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்தியாவில் எச்.ஐ.வி.நோயின் தாக்குதலுக்குள்ளானவர்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் என தெரியவந்துள்ளது. பிரசவ பிரச்சினைகள், கல்வி அறிவு இல்லாதது, விழிப்புணர்வு இல்லாதது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பாலியல் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலரிடமும் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட காரணமாகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி புதிதாக எச்.ஐ.வி. தாக்குதலுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை சுமார் 66 சதவீதம் சரிவடைந்துள்ளது. 2015ல் புதிதாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 86 ஆயிரம் ஆகும். 2015ல் எச்.ஐ.வி. பாதிப்புடன் வாழ்பவர்களின் எண்ணிக்கை 21.17 இலட்சம் என மதிப்பிடப்பட்டுளது. இது 2007ல் 22.26 இலட்சமாக காணப்பட்டது. 5ல் 2 பேர் என்ற அளவில் பெண்களுக்கு எச்.ஐ.வி. பாதிப்புள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 15 வயதிற்கும் குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை 6.54 சதவீதம் என்றும் தெரியவந்துள்ளது. (இ)




# அவரே மேலானவர்!

முன்னொரு காலத்தில் சோழ நாட்டை அசுவத்தாமன் என்ற அரசன் ஆண்டு வந்தான்.

கொடுங்கோலனான அவன், மக்களைக் கொடுமைப்படுத்துவதில் மகிழ்ச்சி கண்டான்.

புதிது புதிதாக வரிகளை விதித்து மக்களைத் துன்புறுத்தினான்.

அவனுடைய கொடுமைகளைத் தாங்க முடியாத மக்கள் அழுது புலம்பினர்.

அவனுண்டய பிறந்த நாள் விழா வந்தது.

முரசு அடிப்பவனை அழைத்தான்.

"நாளை என் பிறந்த நாள் விழா நடைபெற உள்ளது.

நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஒரு மூட்டை அரிசியை அரண்மனையில் தர வேண்டும்.

அதற்குப் பதில் ஒரு மூட்டை நெல்லைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

என் ஒவ்வொரு பிறந்த நாளன்றும் இப்படியே செய்ய வேண்டும்.

அப்படி செய்யாதவர்கள் யாராக இருந்தாலும் தூக்கில் போடப்படுவர்.

இந்தச் செய்தியை நாடெங்கும் தெரிவி,"" -என்றான்.

முரசு அடிப்பவனும் அப்படியே செய்தான்.



தண்டனைக்கு அஞ்சிய மக்கள் அரிசி மூட்டையுடன் அரண்மனைக்கு வந்தனர்.

நெல் மூட்டையைப் பெற்றுக் கொண்டு திரும்பினர்.

உள்ளம் நொந்த அவர்கள், "கொடுங்கோலனே! உன் கொடுமைகளுக்கு அளவே இல்லையா? உன் பிறந்த நாளன்றும் எங்களுக்குத் துன்பம் தருகிறாயே.

உன் இறந்த நாளைக் காண்பதுதானே எங்களுக்கு மகிழ்ச்சி!"" என்று புலம்பினர்.

ஏழை மக்கள் அழுத கண்ணீர் வீணாகுமா?

அரசன் கடுமையான நோயில் விழுந்தான்.

வைத்தியர்களும், அவனைக் காப்பாற்ற இயலாது என்று சொல்லி விட்டனர்.

சாகும் நிலையிலிருந்த அவன், தான் செய்த பாவங்களை நினைத்து வருந்தினான்.

தன் அருகே அழுதபடி நின்றிருந்த மகனைப் பார்த்தான்.

"மகனே! நான் நிறைய பாவங்கள் செய்து விட்டேன். எல்லோரும் என்னைக் கொடியவன், பாவி என்று திட்டுகின்றனர்.

என்னால் அதைத் தாங்க முடியவில்லை.

"மக்கள் எல்லாரும் என்னை நல்லவன், புண்ணியவான் என்று புகழ வேண்டும். உன்னால், அப்படிச் செய்ய முடியுமா?"" என்று கேட்டான்.

"தந்தையே! உங்களை யார் யார் பழித்தார்களோ அவர்கள் வாயாலேயே உங்களைப் புகழ வைக்கிறேன்.

இது உறுதி!"" என்றான் அவன்.

இதைக் கேட்ட அரசன் அமைதியாகக் கண்களை மூடினான்.

மகன் ஆட்சிக்கு வந்தான்.

நாட்டு மக்கள் எல்லோரும் தன் தந்தையை நல்லவர், புண்ணியவான் என்று புகழும்படி செய்தான்.

அப்படியானால், அவன் என்ன செய்து இருப்பான்?

ஆட்சிக்கு வந்ததும் தன் அப்பா செய்த கொடுமைகளை விட அதிகமாக கொடுமைகள் செய்தான்.

இதைக் கண்ட மக்கள், "இந்தக் கொடூரனை விட இவன் அப்பாவே மேல்" எனப் புலம்ப ஆரம்பித்தனர்.

## 02.2016 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1355 - இங்கிலாந்து, ஒக்ஸ்போர்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் இடம் பெற்ற கலவரத்தில் 63 மாணவர்களும், 30 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

1763 - பிரான்ஸ் கியூபெக் மாநிலத்தை ஐக்கிய இராச்சியத்திற்கு அளித்தது.

1798 - லூயி அலெக்சாண்டர் பேர்த்தியர் ரோமைக் கைப்பற்றி அதனை பெப்ரவரி 15 இல் ரோமன் குடியரசாக அறிவித்தான்.

1815 - கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.

1846 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பஞ்சாபின் சீக்கியருக்கும் இடையில் இடம்பெற்ற போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றனர்.

1863 - அலன்சன் கிரென் தீயணைக்கும் கருவியின் காப்புரிமம் பெற்றார்.

1870 - கிறிஸ்தவப் பெண்கள் இளையோர் அமைப்பு (YWCA) அமைக்கப்பட்டது (நியூயோர்க் நகரம்).

1897 - மடகஸ்காரில் மதச் சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.

1914 - யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக சார்ள்ஸ் கம்பர்லாண்ட் நியமிக்கப்பட்டார்.

1931 - புது டில்லி இந்தியாவின் தலைநகராக்கப்பட்டது.

1954 - வியட்நாம் போர்: அமெரிக்க ஜனாதிபதி டுவைட் ஐசன்ஹோவர் வியட்நாம் மீது ஐக்கிய அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என எச்சரித்தார்.

1964 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் கரையில் HMAS மெல்பேர்ன் என்ற விமானந்தாங்கிக்கப்பலும் HMAS வொயேஜர் என்ற கடற்படைக் கப்பலும் மோதிக் கொண்டதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.

1969 - தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்டார்.

1991 - வன்னி மீதான இலங்கை இராணுவத்தினரின் வன்னி விக்கிரம படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதுடன் உலங்குவானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.

1996 - சதுரங்கக் கணனி "டீப் புளூ" உலக முதற்தரவீரர் காரி காஸ்பரோவை வென்றது.

2009 - தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் இரிடியம் 33, காசுமசு-2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்தன.

### பிறப்புகள்

1887 - ஜோன் என்டேர்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1985)

1890 - போரிஸ் பாஸ்டர்நாக், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1960)

1902 - வால்ட்டர் பிராட்டன், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1987)

1910 - ஜோர்ஜஸ் பயர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1969)

### இறப்புகள்

1837 - அலெக்சான்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர் (பி. 1799)

1912 - ஜோசப் லிஸ்டர், பிரித்தானிய அறிவியலாளர் (பி. 1827)

1918 - ஏர்னெஸ்டோ மொனெட்டா, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர் (பி. 1833)

1923 - வில்ஹெம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர் (பி. 1845)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி

# உயர்தொழிற்கல்விக்கான ஒரு திறவுகோல்

யாழ்ப்பாணப் பல்கலை கழகக் கல்லூரியில் வழங்கப்படும் கற்கை நெறிகள்

1. குடிசார் பொறியியல் கட்டுமானத் தொழில்நுட்பவியல் **(Building Services Technology)**

இப்பாடநெறியைத் தொடர்வதன் மூலம் மாணவர்கள் பொறியியல் சாதனங்களை நிர்மாணித்தலையும் அதற்குப் பிந்திய தான சேவைகளையும் எவ்வாறு வழங்குவது என்ற அறிவினை அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். விரிவாகப் பார்ப்பின் தீயணைப்பு சாதனங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு, தானியங்கி சாதனங்களினூடான நிர்வாகம் மற்றும் பொறியியல் பராமரிப்பு, கட்டடங்களுக்கு குளிரூட்டல் சேவைகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் (Air conditioning systems installation and maintenance). பாரம் தூக்கி (Lift Systems) நிறுவுதலும் பராமரித்தலும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டத் தினை நடைமுறைப்படுத்தல் பற்றிய அறிவையும் அதற்கான பயிற்சிகளையும்பெற்றுக்கொள்ள முடியும். அதுமட்டுமல்லாது திட்ட முகாமைத்துவம் பற்றிய அறிவினையும் (Project Management) மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். இதன் மூலம் எதிர் காலத்தில் பொறியியலாளர்களுடன் கைகோர்க்கும் வாய்ப்பினையும் நாளடைவில் அவர்களை அண்மித்த பதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

2. குடிசார் கட்டுமானத் தொழில்நுட்பவியல் **(Construction Technology)**

இப்பாட நெறியானது குடிசார் (சிவில்) பொறியியல் துறையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியிருப்பதுடன் இன்றைய காலத்தினதும் முன்னோடித் தொழில் நிறுவனங்களின் தேவைகளையும் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு மாணவர்களின் தொழில்திறன்களை மெருகூட்டி உள்நாட்டில் அரச, தனியார் நிறுவனங்களில் தகுதியாகவும் இலகுவாகவும் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதுடன், வெளிநாட்டில் அதிகமாக தேவைப்படும் வேலைகளுக்கு முதன்மை நிலையில் தெரிவாகும் சூழலை உருவாக்கித் தருகின்றது.

3. அழகுக்கலை **(Cosmetology)**

இக்கற்கை நெறியானது ஒருவரின் உடல் ரீதியான ஆரோக்கியம் மற்றும் வெளித்தோற்றத்தை எவ்வாறு மெருகூட்டுவது என்பது பற்றிய அறிவினையும் பயிற்சியையும் வழங்குகிறது. உதாரணமாக அழகுக்கலை சார்ந்த ஊட்டம், உணவுக் கட்டுப்பாடு, உடற் பயிற்சி உயர்தர அல்லது மேம்பட்ட சிகை சிகிச்சைகள், உயர்தர



அல்லது மேம்பட்ட சிகை அலங்காரங்கள் உயர்தரமான அல்லது மேம்பட்ட தோற்பராமரிப்பு, கை,கால் பராமரிப்பு உயர்தரமான அல்லது மேம்பட்ட அழகுச் சிகிச்சை போன்றவற்றை குறிப்பிடலாம். இக் கற்கை நெறியினை பயில்வதன் மூலம் அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரம் சார்ந்த அரச, தனியார் துறைகளில் வேலைவாய்ப்புக்களை பெறுவதுடன் சுயதொழிலையும் ஆரம்பிக்கலாம்.

4. விவசாய இயந்திரவியற் தொழில்நுட்பவியல் **(Farm machinery technology / Agricultural machinery technology)**

விவசாய இயந்திரவியற் தொழில நுட்பக் கற்கை நெறியானது, தற்காலத்தின் விவசாயத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களுக்கு அமைவான பாடவிதானத்தை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. குறிப்பாக

1. விளைநிலங்களில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அவற்றின் செயற்பாட்டு பொறிமுறை. அவற்றில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள், விவசாய நடவடிக்கைகளிற்கு அமைவாக இயந்திரங்களை வடிவமைத்தல். இயந்திரங்களில் ஏற்படும் பிரச்சினைகளை இனங்காணலும் அவற்றினைத் தீர்த்தலும்

2. சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தூறல் நீர்ப்பாசனத்தினைத் திட்டமிடலும் வடிவமைத்தலும்

3. கழிவு முகாமைத்துவம் போன்ற பாடவிதானங்களிற்கான கோட்பாடுகளையும் செய்முறை விளக்கங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இக்கற்கைநெறியினைத் தொடர்வதன் மூலம் இயந்திரவியல் சார்ந்த விடயங்களில் தேர்ச்சி பெறுவது மட்டுமல்லாமல் சூழலியல் சார்ந்த விடயங்களைப் பற்றிய அறிவையும் வளர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். உதாரணமாக இயந்திரங்களின் வடிவமைப்பிலும் அவற்றின் தொழிற்பாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் பசைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தை குறைத்துக் கொள்ளலாம். எமது மண்ணின் தன்மைக்கேற்ப அவற்றின் உருவ அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதேபோல நீர் முகாமைத்துவம் பற்றிய அறிவு, சொட்டு நீர்ப்பாசனம், தூறல் நீர்ப்பாசனம் போன்றவற்றின் மூலம் எட்டப்படுகின்றது. திண்ம, திரவக் கழிவுகளை முகாமை செய்யும் அறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆக,விவசாய இயந்திரவியற் தொழில்நுட்ப கற்கைநெறியினைப் பயில்வதன் மூலம் ஒரு சிறந்த பண்ணை முகாமையாளராக (Farm Manager). ஆராய்ச்சியாளராக (Research Officer). தொழில் நுட்பவியலாளராக (Technical Officer). பயிற்றுவிப்பாளராக (Agriculture Instructor). அபிவிருத்தி உத்தியோகத்தராக (Development officer). எதிர்காலத்தில் உங்கள் வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் என்பதில ஐயமில்லை.

5. உணவுத் தொழில் நுட்பம்

நவீன காலகட்டத்தில் காலத்தின் தேவைக்கேற்ப உணவு உற்பத்திக்கான தேவை அதிகரித்துச் செல்கின்றது. இதற்கு உணவுத் தொழில் நுட்பத்துறையின் வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்கின்றது.

இதன் காரணமாக கைத்தொழிற்சாலைகளில் உணவுத் தொழில்நுட்ப வல்லுனர்களான நடுத்தர மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்களிற்கான கேள்வி அதிகரித்துள்ளது. எனவே உணவுத் தொழில்நுட்பத் துறையில உயர் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்கின்ற டிப்ளோமா பட்டதாரி ஒருவர் அரச மற்றும தனியார் நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர், உணவுப் பகுப்பாய்வாளர், உற்பத்தி முகாமையாளர், உணவுத் தொழில்நுட்ப ஆலோசகர், தரநிர்ணய அதிகாரி போன்ற தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம். மாணவர்கள் இக்கற்கைநெறியைக் கற்பதன் மூலமாக தமது எதிர்காலத்தினை வளமாக மாற்றி உணவுத் தொழில நுட்ப வல்லுநர்களாக மிளிர முடியும்.

6. விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை முகாமைத்துவம்

இக் கற்கைநெறியானது சுற்றுலாப்பயணிகள் மற்றும் சுற்றுலாத்துறைசார்துறைகளை முகாமை செய்வதுடன் தொடர்புபட்டதாகும். இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் பின்வரும் தொழில் துறைகளில் நடுத்தர முகாமையாளராக, ஆலோசகர்களாக, மேற்பார்வையாளர்களாக தொழில் புரிவதற்கு தகுதியுடையவர்களாக காணப்படுவா. மேலும் இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் Hotel துறை, இலங்கை சுற்றுலாத்துறை, பொழுதுபோக்கும் இடங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சர்வதேச தொழிற் சந்தைகளில் சேவையாற்றுவதற்கு தகுதியுடையவர்களாக காணப்படுவர். இக்கல்வித் துறையின் பிரதான உள்ளடக்கங்களாக: சுற்றுலாத்துறை முகாமைத்துவம், விருந்தோம்பல் முகாமைத்துவம், பொதுமக்கள் தொடர்பு, Hotel முகாமைத்துவம், உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பு, முன் அலுவலக வரவேற்பு முகாமைத்துவம், சுற்றுலாத்துறை மற்றும் பொதுத் தொடர்பாடல், மனிதவள முகாமைத்துவம், கணக்கீடு மற்றும் முகாமைத்துவம் ஆகியன காணப்படுகின்றன.

7. இயந்திர மின்னணுவியல் **(Mechatronic Technology)**

மேற்படி பாடநெறியானது இன்றைய நவீன யுகத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு மிக அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கற்கை நெறியாகும். வெளிநாடுகளில் ஏற்கனவே பிரபலமான இக் கற்கை நெறிக்கான தேவை நம் நாட்டில் இப்பொழுதுதான் உணரப்பட்டுள்ளது. இக் கற்கை நெறியானது மின்னியல் (Electrical). இலத்திரனியல் (Electronics). இயந்திரவியல் (Mechanical), கணனி தொழில் நுட்பவியல் (Computer Science) ஆகிய நான்கு பிரதானமான Engineering துறைகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் Process Control, Motor Control, PLC, Robotics என்ற நான்கு இணைப்பு பாட நெறிகளைக் கொண்டுள்ளது.

இக் கற்கைநெறியை கற்று முடிப்போர்க்கு அதிக வேலை வாய்ப்புக்கள் உள்ளது என்பது திண்ணம். இவர்கள் வேலை பெறுக்கொள்ளும் தொழில் துறைகளாக தானியங்கி உற்பத்தி துறைகள் (Automated manufacturing sectors). கார் கம்பனிகள் (Car companies), போக்குவரத்துத் துறை (Trans portation sector). தொடர்பாடல்துறை (Tele communication sector), Power stations, சகல வகையான தொழிற்சாலைகள் (All type of factories), Equipment Installation and startup companies என்ற துறைகளை அடுக்காக சொல்லிக் கொண்டே போகலாம். பொதுவாகச் சொன்னால் எங்கெங்கே தானியங்கி இயந்திரங்களின் பயன்பாடு உள்ளதோ அங்கெல்லாம் Mechatronics படித்தவர்களின் தேவை உள்ளது. இன்னும் இலகுவாகச் சொல்லப்போனால் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. புகையிரத பாதை இயங்குகின்றது. புதிய வகை hybrid Car கள் ஓடுகின்றன. வீதி சமிக்ஞைகள் (Road Signals) அலுவலகங்களில் Finger Print அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இயங்காமல் போனால் யார் சரிசெய்வது?. இவற்றின் இயக்கத்தில் தேவைக் கேற்பஎப்படிமாற்றத்தை செய்வது? இத்தகைய வினாக்களுக்கு இந்த Mech atronics பாடநெறியே பதிலாகும்.

8. உற்பத்தித் தொழில் நுட்பவியல் **(Production Technology/Mechanical & Manufacturing Technology)**

மேற்படி பாட நெறியானது பொறியியல் சார்ந்த தொழில் நுட் பத்தையும் இயந்திரப் பாகங் களை வடிவமைத்தல் (Machine Design) மற்றும் தயாரித் தல தொடர்பான நவீன தொழில நுட்பத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. மேற்படி பாடநெறியை கற்பதன் மூலம் மாணவர்கள் இன்றைய உலகிற்கான தொழில்நுட்ப அறிவினையும் நவீன இயந்திரங்களை கையாளுதலுக்கான பயிற்சியையும் பெற்றுக் கொள்ளமுடியும். அதுமட்டுமல்லாது ஒருவேலையை எவ்வாறு திட்டமிடல் (Project Plan) எவ்வாறு நிர்வகித்துக் கொள்ளல் ( Project Mangement) என்றவாறான அறிவினையும் அதன் பிரயோகங்களையும் (Applications) கற்றுக் கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் கூடியதாக இருக்கும். அது மட்டு மல்லாது இயந்திர பாகங்கள் கணனி மென் பொருட்கள் மூலம் உருவாக்கும்முறையையும் அதன் பிரயோகங் களையும் கற்றுக் கொள்ளலாம் (Computer Appli cations in Mechanical Engineering such as Solid works, Auto CAD, Pro-E) வளர்ந்து வரும் தொழில் நுட்ப உலகில் எதிர் காலத்தை நிர் ணயக்கும் இத் துறையை தேர்ந் தெடுப்பதன் மூலம் ஒரு வள மான எதிர் காலத்தைப் பெற்றுக் கொள் வார்கள் என்பது நிதர்சன மான உண்மை.

எனவே பல்கலைகலைக் கழக கல்லூரிகளின் வகிபாகம் ஒரு தனிமனித திறன் விருத்தியில் ஆரம்பித்து கைத்தொழிற் துறைசார் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு வேண்டிய தரமான மனித வலுவை வழங்குவதனூடாக நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு பாரிய சேவையாற்றும் என்பது எல்லோரினதும் எதிர் பார்ப்பாகும். இவ் எதிர்பார்ப்பினை ஈடேற்ற நாட்டின் சகல மக்கள் தொகுதியினரும் குறிப்பாக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இன்னும் கைத்தொழிற்றுறைசார் வல்லுநர்களும் தொழில் வழங்குவோரும் தமது அளப் பரிய பங்களிப்பினை சமூகம் சார் பொது நோக்கிற்காக வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கட்சியின் ஒழுக்க விதிகளை மீறுவோர் மீது நடவடிக்கை

## ஜனாதிபதி எச்சரிக்கை



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிச் செயற் படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஒழுக்க விதிகளை மீறுவோர் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சியில் அனைவரையும் ஒன்றிணைத்து கட்சியை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமென அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

சில தரப்பினர் கட்சியின் ஒழுக்க விதிகளுக்கு புறம்பான வகையில் சில காரியங்களில் ஈடுபட்டு வருவதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு செய்வதனால் கட்சிக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும என தெரிவித்துள்ளார்.

இதன்போது ஒரு குழுவினை இலக்கு வைத்து பழிவாங்கும் நடவடிக்கை தடுக்க தலையீடு செய்யுமாறு சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

எந்தவொரு தரப்பும் பழிவாங்கப்படவில்லை எனவும் குற்றம் செய்த அனைவரும் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி மைதத்திரிபால சிறிசேன, அமைச்சர்களுக்கு பதிலளித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## நல்ல நண்பனாக நடந்து கொள்வது எப்படி?

நமக்கு எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கை முக்கியமானதல்ல. ஆனால், நம்மிடம் நட்பு வைத்திருப்பதைப் பெருமையாக எண்ணி மகிழ்ச்சி அடைபவர்கள் எத்தனை பேர் என்ற எண்ணிக்கையே மிகமிக முக்கியமானது.

நம் மன வேதனைகளைக் கொட்டித் தீர்க்கவும் ஆபத்துக் காலத்தில் உதவவும், அரிய பல யோசனைகளைச் சொல்லவும் நமக்கு நல்ல நண்பர்கள் தேவை. அவர்களை நாம் தாம் வலியச் சென்று சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

நட்பில் சுயநலம் இருக்கக்கூடாது. எந்தவிதமான எதிர்கால வரவேற்புகளும் அதில் இழையோடிக் கொண்டிருக்கக் கூடாது. பயன் கருதா நட்பே பல நாள் நீடிக்கும். நண்பர்களிடம் காணப்படும் குற்றம் குறைகளைப் பெரிதுபடுத்தக் கூடாது. நூற்றுக்கு நூறு நாம் விரும்பும்படி நண்பர்கள் கிடைக்கமாட்டார்கள். மனிதர்கள் குறைபாடு உடையவர்கள். இந்த உண்மையை உணர்ந்து சரிசரி என்று போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

நண்பனின் சிறப்பியல்புகளைப் பலர்முன் பாராட்ட வேண்டும். தவறுகளைத் தனியே சுட்டிக் காட்ட வேண்டும். நண்பனுக்கு அந்த நேரத்தில் எரிச்சல் ஏற்பட்டாலும் அனுபவ பூர்வமாக அவன் உண்மையை உணரும் போது, நமக்கு நன்மை ஏற்பட வேண்டும் என்று தானே சொன்னான் என்று உணருவான். நட்பு இறுகும்.

இடையிலே இருப்பவர்கள் இழுத்து விட்டு வேடிக்கை பார்ப்பார்கள். இவர்களுக்கு இடம் கொடுக்கவே கூடாது. நண்பன் உங்களைப் பற்றித் தவறாகவே சொல்லியிருந்தாலும் உண்மையை நண்பனிடமே போட்டு உடைத்து, நீ இப்படி எல்லாம் சொல்லி இருக்கமாட்டாய் என்று எனக்குத் தெரியும் என்று சொல்லிப் பெருந்தன்மையாக நடந்து கொள்ள வேண்டும். நண்பன் போக்கில் நல்லதொரு மாற்றம் ஏற்படும்.

நண்பன் உதவி நாடி வருமுன் குறிப்பறிந்து வலியச் சென்று உதவ வேண்டும்.

நடந்து விட்ட சம்பவங்களில் நம் பங்கில் தவறு இருந்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும். தங்கள் குறையை உணர்ந்து மன்னிப்புக் கேட்காதவர்கள் நட்புச் செல்வத்தை இழப்பதோடு தங்கள் எதிர்கால வாழ்வையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

கணவன் மனைவிக்கு இடையே உள்ள பிணைப்புக்கு அடுத்த படியாகச் சொல்லக் கூடியது நட்பு ஒன்று தான். அது ஒப்பந்தத்தால் ஏற்படுத்திக் கொள்ளாத உன்னத உறவு.

அந்த உறவில் சிறு சிறு சலனங்களுக்கு இடமில்லை. சிறிய விடயங்கள் முதல் பெரிய விடயங்கள்வரை விட்டுக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாகப் பலன் தரா. ஆனால் என்றேனும் ஒருநாள் நிச்சயமாக இவற்றின் பலனை உணரும் நாள் வரும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தம் முன்னேற்றத்தில் நீங்கள் மிகுந்த அக்கறை உள்ளவர் என்ற எண்ணத்தை நண்பரின் மனத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இது உங்களால் முடியுமானால் உங்கள் நண்பரின் நண்பர்கள் பட்டியலில் உங்கள் பெயர் முதல் இடத்தைப் பெறுவது நிச்சயம்!

*லேனா தமிழ்வாணன்*

# படையினரை பயன்படுத்திப்புதையல் தோண்டியமை குறித்து விசாரணை



படையினரை பயன்படுத்தி புதையல் தோண்டியமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவப் படையினரை பயன்படுத்தி நாடு முழுவதிலும் காணப்படும் பெறுமதியான புதையல் பொருட்களை, வெடிபொருட்களை வைத்து வெடித்து, அவற்றில் காணப்பட்ட பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையிடபட்டமை குறித்து நிதி மோசடிப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு மற்றும் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு என்பன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் பதவி வகித்த முக்கிய அமைச்சர் ஒருவர் படைவீரர்களைப் பயன் படுத்தி புதையல் தோண்டி பெறுமதியான பொருட்களை எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் மற்றும் ஏனைய இடங்களில் பாதுகாப்பாக புதைக்கப்பட்டுள்ள புதையல்களை தோண்டி எடுத்து அவற்றில் காணப்பட்ட விலைமதிப்பற்ற பொருட்கள் எடுத்துச செல்லப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்ட சிலர் இது குறித்து முறைப் பாடு செய்துள்ளனர்.

வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகியனவற்றில் அமைந்துள்ள புராதன இடங்களில் பல நூறு ஆண்டுகளாக பாதுகாப்பாக பேணப்பட்டு வந்த புதையல்கள் படையினரைக் கொண்டு தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

கற்களுக்குள் புதைக்கப்பட்ட இந்த புதையல்கள் வீதிகளை அமைப்பதற்கு கற்களை எடுக்கும் போர்வையில் படையினரை பயன்படுத்தி கற்களை உடைத்து அவற்றில் காணப்பட்ட புதையல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க முறைப்பாடு செய்துள்ளார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

# யோஷிதவின் தொலைபேசி பயன்பாடு தொடர்பில் அறிக்கை கோருகிறார் அமைச்சர் சுவாமிநாதன்

(கொழும்பு)

சிறைச்சாலைக்குள்யோஷித ராஜபக்ஷ கையடக்க தொலைபேசி பயன்படுத்துவது குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமர்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதன் உத்தரவிட்டுளளார்.

பணச்சலவை குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் யோஷித ராஜபகஷ, சில தினங் களுக்கு முன்னர் தனது உறவினர்களை சந்தித்து விட்டு சிறைக்கூண்டுக்கு திரும்பும் வேளையில் அவரிடம் தொலைபேசி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறை விதிகளின் பிரகாரம் எந்தவொரு கைதியும் தொலைபேசி பயன் படுத்த முடியாது. எனினும் யோஷித நவீன வகை தெலைபேசி ஒன்றை சிறைக்குள் பயன் படுத்தி வருகின்றார். இது ஊடகங்களில் பெரும் பரபரப்புச் செய்தியாக வெளி வந்திருந்தது.



இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பான விசாரணை நடத்தி இரண்டு நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டீ.எம். சுவாமிநாதன் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு முன்னதாக முனனாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியிலும் அவர் தடுத்து வைக்கப் பட்டிருந்த சிறைச்சாலை எச். வார்ட்டில் மட்டுமன்றி அதற்கு வெளியேயும் பகிரங்கமாகபயன்படுத்தியிருந்ததை ஏராளமான கைதிகள் பார்த்துள்ளனர். (இ)

# பிரதமருக்கு நன்றி தெரிவித்தார் சரத்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நன்றி தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு சேவையாற்றுவதற்கு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கியமைக்காக பிரதமர் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொண்டு தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்கு சென்று, மக்களுக்கு சேவையாற்ற முடிந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது என தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் ஊடாக மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்ற திட்டமிட்டுள்ளதாக சரத் பொன்சேகா கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு, சரத் பொன்சேகாவிற்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குவது குறித்து எடுத்த தீர்மானம் தொடர்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், விஜயதாச ராஜபக்ஷ, ரோசி சேனாநாயக்க போன்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் சரத் பொன்சேகாவிற்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்குவதனை எதிர்த்திருந்தனர்.

பெரும்பான்மையானவர்கள் ஆதரவினை வெளியிட்டதனைத் தொடர்ந்து சரத் பொன்சேகாவிற்கு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

# தமிழ் சினிமா வரலாறு

96

## சென்னையில் ஏவி.எம். ஸ்ருடியோ வாழ்க்கையில் வைஜயந்திமாலா அறிமுகம்

வாழ்க்கை

சென்னையில் ஏவி.எம் ஸ்ருடியோ அமைக்கப்பட்டதும் தயாரான முதற் படம் வாழ்க்கை ப.நீலகண்டன் எழுதிய கதை.

கதாநாயகியாக யாரைப் போடலாம் என்று ஏவி.எம். யோசித்தார். வைஜயந்திமாலாவுக்கு அப்போது 17 வயது. ஒரு நடன நிகழ்ச்சியில் அவரைப் பார்த்த ஏவி.எம். கதாநாயகியாக அவரை ஒப்பந்தம் செய்தார். அவருக்கு மாத சம்பளம் 2,350 ரூபா மூன்று வருடத்திற்கு ஒப்பந்தம்.

கொஞ்சம் நகைச்சுவை கலந்த கதாநாயகன் வேடத்துக்கு டி.ஆர்.ராமச்சந்திரன் தேர்வு செய்யப்பட்டார்.

ஒரு ஏழைப்பெண்ணைக் காதலித்து, அவளைக் கைவிடும் வில்லன் வேடத்தில் எஸ்.வி.சகஸ்ரநாமமும் ஏழைப் பெண்ணாக எம்.எஸ்.திரௌபதியும் நடித்தனர். நகைச்சுவை வேடத்தில் (வைஜயந்திக்கு தந்தையாக) கே.சாரங்கபாணி நடித்தார்.

ஹிந்தி மெட்டு

வாழ்க்கை படம் தயாராகி வந்த போது கிட்கி என்ற ஹிந்திப்படம் ஓடிக் கொண்டிருந்தது. அதில் இடம்பெற்றிருந்த அத்தனை பாடல்களும் சுப்பர் ஹிட்.

குறிப்பாக டடடா... டடடா... டட்டாடடா... என்று வருகிற பாடல் எல்லோரையும் முணுமுணுக்க வைத்தது.

அந்தப் பாடலின் மெட்டில் வாழ்க்கையில் ஒரு பாடல் இடம்பெற்றது. வைஜயந்திமாலா ஒரு கட்டத்தில் ஆண் வேடத்தில் வந்து டி.ஆர். ராமச்சந்திரனை ஏமாற்றுவார். பிறகு உன் கண் உன்னை ஏமாற்றினால் என் மேல் கோபம் உண்டாவதேன்... டடடா... டடடா... டட்டாடடா... என்று பாடுவார்.

1949 டிசெம்பர் 22 ஆம் திகதி வாழ்க்கை வெளிவந்தது. படம் மெகாஹிட். தமிழ்ப்படக் கதாநாயகிகள் பெரும்பாலும் முதிர்கன்னிகளாகவும் இரண்டு மூன்று குழந்தைகளுக்கு தாயாகவும் இருந்த காலகட்டம் அது. இளமை, அழகு, படிப்பு, நடனம் ஆடும் திறமை ஆகிய அனைத்தையும் பெற்ற 17 வயது வைஜயந்திமாலா ஒரே நாளில் புகழின் சிகரத்தை அடைந்தார். எங்கு பார்த்தாலும் டடடா... பாட்டு ஒலித்தது.

வைஜயந்திமாலாவின் [illegible]

வாழ்க்கை வரலாறு புத்தகங்களை சில பதிப்பகங்கள் எட்டணாவுக்கும் ஒரு ரூபாய்க்கும் வெளியிட்டன.

சென்னையில் ஏவி.எம். பனரில் தயாரிக்கப்பட்ட



"வாழ்க்கை"யில் ஆண் வேடத்தில் வைஜயந்திமாலா. அருகே டி.ஆர்.ராமச்சந்திரன்.

[illegible]

கொடுத்தது இந்தப்படம் தான் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹிந்தியில் வாழ்க்கை

வாழ்க்கை படத்தின் கதையைத் தெலுங்கு, ஹிந்தி [illegible]

பெயர் ஜீவிதம். இதை எம்.வி. ராமன் (அதுவரை இணை டைரக்டராக பணியாற்றியவர்) டைரக்ட் செய்தார்.

ஹிந்திப்படம் பஹார் என்ற பெயரில் தயாராகியது. இதில் கரன் திவான் (ரத்தன் என்ற மெகாஹிட் படத்தின் ஹீரோ கதாநாயகனாக நடித்தார்.

தெலுங்கு, ஹிந்திப்படங்களும் வெற்றி பெற்றன.

குறிப்பாக வைஜயந்திமாலாவுக்கு வடநாட்டில் பெரும் புகழ் கிடைத்தது. வடநாட்டைச் சேர்ந்த பட அதிபர்கள், வைஜயந்திமாலாவை அணுகி தங்கள் படத்தில் நடிக்கும்படி கோரி பெரும் தொகையை அட்வான்ஸாக கொடுத்தனர்.

இதனால் வைஜயந்திமாலா மும்பைக்கு குடியேறி ஹிந்திப் படங்களில் நடிக்கலானார். அவர் படங்கள் வரிசையாக வெற்றி பெற்றன. பழம் பெரும் நடிகைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு குறுகிய காலத்தில் நம்பர் வன் இடத்தை பிடித்தார்.

நீண்ட காலம் ஹிந்திப் படங்களில் நடித்து சாதனை படைத்தார்.

(தொடரும்)

# தேசிய விளையாட்டு குழுமத்திற்காக வீர, வீராங்கனைகளை ஆட்சேர்த்தல்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நடப்பாண்டு திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கரப்பந்து (ஆண்,பெண்), கபடி (ஆண்) குழாமிற்காக புதிய விளையாட்டு வீர, வீராங்கனைகளை சேர்த்துக்கொள்வதற்குரிய தகைமையினை பரீட்சித்து பார்த்தல் மற்றும் செயல்முறைப் பரீட்சை நாளை 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு மஹரகமவில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக்காரியால யத்தில் நடைபெற உள்ளது.

இப் பயிற்சியானது 3 வருட தங்குமிட பயிற்சி என்பதுடன் பயிற்சி காலத்திற்குள் பயிற்சி பெறுபவருக்கான உணவு, தங்குமிட வசதிகள், விளையாட்டு உடை, வைத்திய வசதிகள் என்பன தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இலவசமாக வழங்கப்படும்.

கரப்பந்து (பெண்,ஆண்), 19 வயதிற்கு குறைந்த மற்றும் (ஆண் - 183 செ.மீ.மேல், (பெண் - 165 செ.மீ. மேல்) உயரமுடையவர்க்ளும், கபடி (ஆண்) 20 வயதுக்கு குறைந்த 165 செ.மீ. மேல் உயரமுடைய ஆண்களும் விண்ணப்பிக்க முடியும்.

எனவே தகுதியுள்ளவர்கள் அன்றைய தினம் இல-65,High level road, மஹரகமவில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ், விளையாட்டு சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை 021 222 2526 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# மழைநீர் சேகரிப்பு தொகுதி வழங்கல்

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவு ஊடாக வழங்கப்படவுள்ள மழைநீர் சேகரிப்புத் தொகுதிகள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஜே/56 தம்பாட்டிக்கிராமசேவையாளர் பிரிவில் நடைபெறவுள்ளது. மேற்படி மழைநீர் சேகரிப்பு தொகுதிகள் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிலுள்ள 15 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கமைய தெரிவு செய்யப்பட்ட தம்பாட்டி ஜே/56 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு இன்று வழங்கப்படவுள்ளது. (இ-5)

# மகத்தான விருது வழங்கும் நிகழ்வு

கொழும்பு-யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான மகத்தான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முன்னாள் ஆசிரியர்கள் எஸ்.சிவலோகநாதன், தி.விசாகராஜா மற்றும் யாழ்.இந்துக் கல்லூரியில் சாதனையை நிலைநாட்டிய விளையாட்டு வீரர் திருமலை ஜபருல்லா ஆகியோருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் பங்கு கொள்ள விரும்புவோர் 011 236 0575 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தத்தமது வருகையினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கொழும்பு- யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் எம்.என்.அசோகன் கேட்டுள்ளார். (இ-5)

# க.பொ.த. சா/த செய்முறை பரீட்சை 23ஆம் திகதி ஆரம்பம்

(2015 இல் நடைபெற்று முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய தமிழ், சிங்கள மொழி மூல மாணவர்களுக்கான 6 பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நடைபெறவுள்ள கால ஒழுங்கினை இலங்கைப் பரீட்சைத்திணைக் களத்தின் பரீட் சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம். என்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

சங்கீதம் (கீழத்தேயம்), சங்கீதம் (மேலைத்தேயம்), சங்கீதம் (கர்நாடகம்) , நடனம் (சுதேசம்), நடனம் (பரதம்) நாடகமும் அரங்கியலும் ஆகிய 6 பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 3 ஆம் திகதி வரையான (27, 28ஆம் திகதிகள் தவிர்ந்த) எட்டு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (3-15)



யாழ்.இந்திய துணைத் தூதுவராலயத்தின்
அனுசரணையில்
வட இலங்கைச் சங்கீத சபை வழங்கும்
சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 169 ஆவது
இசை ஆராதனை-2016
காலம்
நிகழும் மன்மத ஆண்டு மாசித் திங்கள் 1 ஆம் நாள்
13.02.2016 சனிக்கிழமை
நேரம்
காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை
இடம்
வட இலங்கைச் சங்கீத சபை
தற்பரானந்தன் அரங்கு, மருதனார் மடம்
தலைவர்
திரு.ந.தெய்வேந்திரராஜா அவர்கள்
(யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும்
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்)
பிரதம விருந்தினர்
கௌரவ A.நடராஜன் அவர்கள்
(யாழ்.இந்தியத் துணைத் தூதுவர்)
சிறப்பு விருந்தினர்
திரு.இ.இரவீந்திரன்
(செயலாளர்,கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்)
(சி-3727)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
வட இலங்கைச் சங்கீத சபை
மருதனார் மடம்.
சி.சிவராஜன்
செயலாளர்.

# யாழ்.வீரன் ஞானரூபனை வெற்றி பெற வைப்போம்



அகில பல்கலைக்கழக 2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரரை தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் "Most Popular University Sports Star 2015" எனும் போட்டியில் யாழ்.பல்கலை கழக வீரன் செபமாலைநாயகம் ஞானரூபன் (ஞானம்) இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். இவர் ஒரு இலங்கை தேசிய அணி வீரனுமாவார். இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ள 16 வீரர்களில் ஒரே ஒரு தமிழ்வீரன் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. வரும் 10 ஆம்திகதி வரை ஒருவரால் தினமும் ஒவ்வொரு வாக்கு வீதம் செலுத்த முடியும்.

நீங்கள் வாக்களிக்க செய்ய வேண்டியது.

முதலில் MORASPIRT முகப்புத்தக பக்கத்தை லைக் செய்த பின் sports moraspirit.com இணையத்தள முகவரிக்கு சென்று முதல் நிலையில் இருக்கும் SEBAMALAINAYAGAM GNANARUBAN இற்கு உங்கள் வாக்கை அளியுங்கள். (க)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு இலங்கை கிரிக்கெட் பவுண்டேசன் மற்றும் இலங்கை கிரிக்கெட் அணி ஆகியன இணைந்து ரூ 3 இலட்சத்துக்கு மேற்பட்ட கிரிக்கெட் உபகரணங்களை அண்மையில் பாடசாலை அதிபரிடம் கையளித்த போது...

# மரதன் ஓட்டப்போட்டிக்கு விண்ணப்பிக்குக

சுழிபுரம் விக்டோறியன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தினையும் பரிசில் வழங்குதலையும் முன்னிட்டு 22.03.2016 காலை மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

நுழைவு அனுமதி 50 ரூபா ஆகும். அரச வைத்தியசாலை ஒன்றில் மருத்துவ சான்றிதழ் பெற வேண்டும். போட்டியில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். மேலதிக தொடர்பு மற்றும் பதிவுகளுக்கு 077 513 4348 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் . (க)

# மரதன் ஓட்ட போட்டியில் கிளி.மாணவன் சாதனை



கிளிநொச்சி மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 2016 ஆம் ஆண்டிற்கான அரை மரதன் ஓட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக வீரன் இளங்கீரன் அனுஜன் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் சார்பில் கலந்து கொண்டு முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டதுடன் மாவட்டத்தில் இதுவரை இருந்த சாதனையை முறியடித்துள்ளார்.

இதுவரை 1 மணித்தியாலயமும் 18 நிமிடங்களும் இருந்த நிலையில் இவர் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களில் குறித்த தூரத்தினை அடைந்து புதிய சாதனையை நிலைநாட்டினார். (க)

# யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக மாவட்ட ரீதியிலான கூடைப்பந்தாட்டம்

## சென்றலைட்ஸ் சம்பியன்






யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய மாவட்ட ரீதியிலான கூடைப்பந்தாட்ட போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கே.சீ.சீ.சீ.அணி மோதியது.

ஆரம்பத்தில் இப்போட்டியில் இரு அணிகளும் விறுவிறுப்பை ஏற்படுத்திய போதும் சென்றலைட்ஸ் அணி தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் வேகமாக புள்ளிகளை பெற்றுக் கொண்டது.

இறுதியில் சென்றலைட்ஸ் அணி 88.45 என்னும் புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியனாகியது. இப்போட்டியில் சிறந்த முன்கள வீரராக நிஷாந்தன் சிறந்த தடுத்தாடும் வீரராக அஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# இலங்கை அணிக்கு வந்த சிக்கல் புலம்பித் தீர்க்கும் சந்திமால்



முன்னணி வீரர்கள் காயம் அடைந்திருப்பது இலங்கை அணிக்கு பெரிய இழப்பை ஏற்படுத்தியிருப்பதாக அந்த அணியின் தலைவர் சந்திமால் கூறியுள்ளார்.

இலங்கை அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இந்தியா-இலங்கை அணிகள் மோதும் முதல் இருபது-20 போட்டி புனேயில் நேற்று தொடங்குகிறது.

இந்த தொடர் குறித்து அந்த அணியின் தலைவர் தினேஷ் சந்திமால் பேட்டியளித்துள்ளார். அவர்கூறுகையில் ஆசியக்கிண்ணம் மற்றும் இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கு முந்தைய இந்த தொடரில் சிறப்பாக செயற்பட வேண்டும்.

ஆனால் இலங்கை அணியில் நான்கு முதல் ஐந்து முன்னணி வீரர்கள் காயத்தால் அவதிப்படுகிறார்கள். டில்ஷான் ஏற்கனவே கை விரல் முறிந்து சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அவர் முதல் போட்டியில் விளையாடமாட்டார்.

மேலும், நேற்றைய வலைப் பயிற்சியின் போது இடது கை வேகப்பந்து வீச்சாளர் பினுரா பெர்னாண்டோவின் தொடைப்பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் இந்த தொடரில் இருந்து விலகியுள்ளார்.

அணியில் ஏற்ற இறக்கம் இருக்க தான் செய்யும். இந்த தொடரில் சிறப்பாக விளையாட ஆவலுடன் உள்ளோம் என்று கூறியுள்ளார்.

# இருபது-20 ஆஸி.அணி அறிவிப்பு

இந்தியாவில் நடக்கவுள்ள இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கான அவுஸ்திரேலிய அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. இருபது-20 உலகக்கிண்ண திருவிழா இந்தியாவில் எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி முதல் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை நடக்கிறது. இதில் பங்கேற்கும் அணியை அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஏற்கனவே இருபது-20 அணியின் அணித்தலைவராக இருந்த ஆரோன் பின்ஞ் நீக்கப்பட்டு ஸ்டீவன் சுமித் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியின் தலைவராகவும் இருக்கிறார்.

அதேபோல் விக்கெட் கீப்பர் மத்யூ வாடே நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக டெஸ்டில் விக்கெட் கீப்பராக பணியாற்றும் பீட்டர் நெவல் சேர்க்கப்பட்டுள்ளார். தவிர, ஆஸ்டன் ஆதர், ஆடம் ஜம்பா ஆகியோர் முதன் முறையாக இருபது-20 அணியில் இடம் பெற்றுள்ளனர். மேலும் காயம் அடைந்த ஆரோன் பிஞ்ச், நாதன் கோல்ட்டர், பல்க்னெர் ஆகியோரும் அணிக்கு தெரிவாகியுள்ளனர்.

**இருபது-20 உலகக்கிண்ண அவுஸ்திரேலிய அணி**

ஸ்டீவன் சுமித் (அணித்தலைவர்), டேவிட் வார்னர், ஆரோன் பிஞ்ச், வோட்சன், மக்ஸ்வெல், மிட்செல் மார்ஷ் ஆஸ்டன் அகர், உஸ்மான் குவாஜா, பீட்டர் நெவல், பல்க்னெர், ஹாஸ்டிங்ஸ், நாதன் கோல்ட் டர், ஹாசல்வுட், ஆண்ட்ரூ டை, ஆடம் ஜம்பா.

# சவுதி அரேபிய மொடல் அழகியை கரம்பிடித்தார் இர்பான் பதான்



இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான இர்பான் பதான், சவுதி அரேபிய மொடல் அழகி சபா பாய்க் என்பவரை மணந்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரராக வலம் வந்த இர்பான் பதான், 2012 ஆம் ஆண்டுக்கு பிறகு அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் சபாவைத் டுபாயில் சந்தித்த இர்பான் பதான், அவருடன் காதலில் விழுந்தார். இதையடுத்து இருவீட்டார் சம்மதத்துடன் தற்போது இவர்களின் திருமணம் நடந்துள்ளது.

இர்பான் பதான், தனது மனைவியுடன் புனித மெக்கா நகரில் எடுத்த புகைப்படத்தை டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படம் இணையத்தில் பிரபல்யம் ஆகியுள்ளது.

# கல்வி அமைச்சருக்கு எதிராக ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு எதிராக இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க சேவை குற்றச்சாட்டை முன் வைத்துள்ளது.

இவர் கல்வி அமைச்சராக பதவியேற்ற நாளிலிருந்து திறமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அரசியல் ரீதியாக ஆயிரத்திற்கும் அதிகமான பேருக்கு கலவித்துறையில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்திருப்பதாக தெரிவித்தே கல்வி அமைச்சர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் நாடளாவிய ரீதியில் காணப்படும் தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அச்சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலைகளில் சாதாரண ஊழியர்களாக கடந்த காலங்களில் சேவையாற்றியவர்கள் ஆய்வக ஊழியர்களாக வெவ்வேறு பாடசாலைகளுக்கு பதவி உயர்வுபெற்று சென்றுள்ளதாகவும், இந்த பாடசாலை ஆய்வக ஊழியர்கள் உயர்தரத்தில் கட்டாயமாக விஞ்ஞான பாடத்தை கற்றிருப்பது அவசியம் என்ற நடைமுறை காணப்பட்டது.

ஆனால் தற்போது உயர் தரத்தில் கலைப்பிரிவில் படித்தவர்களும் இந்த ஆய்வக ஊழியர்க்ளாக பதவி வகிப்பதாக அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-02.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.03 | 146.04 |
| பவுண்ட் | பிரிட்டன் | 204.16 | 211.38 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 158.24 | 164.73 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 143.21 | 149.17 |
| டொலர் | கனடா | 101.24 | 105.36 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.94 | 103.63 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.56 | 104.43 |
| ரூபா | இந்தியா | 2.1138 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.5699 |
| குவைத் | டினார் | 478.8192 |
| ஓமான் | ரியால் | 373.7559 |
| கட்டார் | ரியால் | 39.5235 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3706 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1792 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 110 | 90 | 70 | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 | 45 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 250 | 200 | 200 | 250 | 200 |
| தக்காளி | 60 | 60 | 50 | 50 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 250 | 250 | 160 | 200 | 180 | 100 | 250 |
| பூசணி | 100 | 100 | 60 | 70 | 60 | 120 | 60 |
| புடோல் | 60 | 40 | 70 | 70 | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 40 | 45 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 80 | 50 | 70 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 150 | 60 | 50 | 60 | 70 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 80 | 90 | 150 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 80 | 80 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 140 | 100 | 140 | 100 | 100 | 140 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 | 80 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| கறிமிளகாய் | 300 | 300 | 190 | 200 | 160 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 400-600 | 800 | 400 | 500 | 1000 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 100 | 60 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 70 | — | 70 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 20 | 40 | 15 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 50 | 80 | 40 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 40 | 50 | 30-45 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 90 | 140 | 100 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 60 | 60 | 80 | 70 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 100 | 40 | 40 | 35 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | — | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## முன்னாள் தமிழ் எம்.பிக்கள் சுட்டுக்கொலை 101

இலங்கையில் 2 முன்னாள் தமிழ் எம்.பிக்களை விடுதலைப் புலிகள் தான் கடத்திச் சென்று சுட்டுக்கொன்றதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சாட்டியிருக்கிறது. அவர்களைக் கொலை செய்தது நாங்கள் அல்ல. விடுதலைப் புலிகளுக்கும் இந்தப் படுகொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

விடுதலைப்புலிகள் மீது இலங்கை அரசாங்கம் வேண்டுமென்றே வீண் பழி சுமத்துகிறது.போராளிகள் இயக்கங்களைப் பிரித்து ஆள்வதற்கு இலங்கை அரசாங்கம் செய்யும் பொய் பிரசாரம் இது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

### அனுதாபம்

முன்னாள் எம்.பிக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவர் அமிர்தலிங்கமும் மற்றும் சில தலைவர்களும் சென்னையில் இருந்தனர். படுகொலை செய்தியைக் கேட்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

கட்சியின் நிர்வாகக்குழு அவசரமாகக் கூடி அனுதாபம் தெரிவித்தது. கூட்ட முடிவில் வெளியிட்ட அறிக்கையில் முன்னாள் எம்.பிக்கள் சுட்டுக் கொல்லப்பட்டது தமிழ் மக்களுக்கு பெரிய இழப்பு. இந்தக் கொடுமையான செயலை யார் செய்திருந்தாலும் அதைத் தமிழ் மக்கள் கண்டிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

### அமிர்தலிங்கம் பேட்டி

இலங்கைத் தமிழர் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.பிக்களான ஆலாலசுந்தரமும் தர்மலிங்கமும் கொல்லப்பட்டதால் சமரசப் பேச்சு நடக்குமா என்பது பற்றி அமிர்தலிங்கத்திடம் கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்து அவர் கூறியதாவது,

### பாதிப்பு இல்லை

சமரசப் பேச்சு நடப்பதை முன்னாள் எம்.பிக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் பாதிக்காது என்று நினைக்கிறேன்.

ஆலாலசுந்தரத்தையும் தர்மலிங்கத்தையும் கொன்றது யார் என்று தெளிவாக தெரியவில்லை.

இது இலங்கைத் தமிழர் கட்சியை மிரட்டுவதற்கான முயற்சியாக இருக்கலாம்.

### காரணங்கள்

அப்படி நினைப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

இந்தியாவில் லோங்கோவால் சுட்டுக் கொல்லப்பட்டது போல் தமிழர் கட்சித்தலைவர்களும் கொல்லப்படுவார்கள் என்று யாரோ சிலர் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள்.

ஆனால் ஆலாலசுந்தரம் சுட்டுக்கொல்லப்படுவதற்கு ஒரு நாளைக்கு முன்பு அவருடன் தொலைபேசியில் பேசினேன்.

பாலசிங்கத்தையும் சந்திரஹாசனையும் இந்தியாவில்



அமிர்தலிங்கம்

இருந்து நாடு கடத்துவதற்கு இலங்கைத் தமிழர் கட்சி தான் காரணம் என்று யாழ்ப்பாணத்தில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருப்பதாக ஆலாலசுந்தரம் கூறினார்.

18 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்துடன் தமிழர் கட்சி ஒப்பந்தம் செய்து கொள்ளப் போவதாக இலங்கைப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

முன்னான் எம்.பிக்களைக் கொல்லுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இலங்கை இராணுவம் தமிழர்களிடையே அதிருப்தி ஏற்படுவதற்காக இலங்கை இராணுவம் இந்தக் கொலைகளைச் செய்திருக்கலாம் என்று கூறுவதையும் ஏற்க முடியாது.

தமிழர்கள் நிறைந்துள்ள யாழ்ப்பாணப் பகுதிகளில் அம் மாதிரி நடக்க முடியாது.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கடந்த 2 மாதங்களாக ஒற்றுமையாக முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம்.

இந்த வேளையில் முன்னாள் எம்.பிக்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

இவ்வாறு அமிர்தலிங்கம் கூறினார்.

### ஜெயவர்த்தனவுக்கு ராஜீவ்காந்தி எச்சரிக்கை

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது இனியும் நீடிக்கக்கூடாது என்று ஜெயவர்த்தனவுக்கு பிரதமர் ராஜீவ்காந்தி எச்சரிக்கை விடுத்தார். இலங்கை இராணுவத்தின் அட்டூழியத்தை தடுத்து நிறுத்தும்படி அவர் கண்டிப்புடன் தெரிவித்தார்.


இலங்கையில் விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு இராணுவம் தொடர்ந்து அப்பாவி தமிழர்களை கொன்று குவிப்பதில் ஈடுபட்டது.

(தொடரும்)



இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்

# குறைகளை களைந்து நிறைகளை காண அழைக்கும் காலமே தவக்காலமாகும்





ம.பிரான்சிஸ்க் - கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

உலகமயமாக்கலின் உன்னத வளர்ச்சி இனறு உலகத்தை உருக்குலைத்துக்கொண்டிருக்கிறது என்று கூட சொல்லலாம். இத் தருணத்தில் அண்டவெளி ஆய்வுப் பயணங்கள் ஆங்காங்கே அரங்கேறுகின்றன. இந்த நிகழ்கால செயற்பாடுகள் வானமும் பூமியும் அழிந்தாலும் என் வார்த்தையே அழியாது என்ற ஆண்டவரின் அருள்வாக்கையே ஆட்டம் காண வைக்கிறன. இக்காலத்தில் நான் உலகம் முடியும் காலம் வரை என்றும் உங்களோடு இருக்கின்றேன் என்று கூறிய இறைவனைத் தேடி கூடி ஓட வேண்டும் என்று நற்செய்தி நானிலமெங்கும் ஒலிக்காமலுமில்லை. இன்று கத்தோலிக்கர்கள் தவக்காலம் என்னும் காலத்திற்குள் நுழைகிறார்கள்.

**தவக்காலம் என்றால் என்ன?**

இறைவிருப்பத்தை வாழ்வில் ஏற்று அதன்படி வாழ்ந்து கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாவதற்கான காலமே தவக் காலமாகும். நாம் அனைவரும் மீண்டும் ஒருமுறை எம் ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தி வலுப்படுத்தி வளப்படுத்த வல்ல தேவன் தரும் காலம் என்று உறுதியாகக் கூறலாம். தவககாலத்தின் தொடக்க நாளான இப்புதனை முன்பு விபூதிப் புதன் என்றும் தற்போது திருநீற்றுப் புதன்-சாம்பல் புதன் என்றும் கத்தோலிக்கர் அழைப்பர். இன்றைய தினம் திருப்பலிப் பூசையில் பங்கு கொள்பவர்களின் நெற்றியில் நாம் மண்ணுக்குரியவர்கள் மண்ணுக்கே திரும்ப வேணடும் என்பதை நினைவுபடுத்துவதற்கே சாம்பலால் சிலுவை அடையாளம் இடப்படுகின்றது. கத்தோலிக்க திருச்சபையின் வழக்கப்படி, கடந்த வருடம் குருத்து ஞாயிறன்று வழங்கப்பட்ட குருத்தோலைகளை எரித்து, சாம்பலாக்கிக் கோவிலில் வைப்பர். அங்கே வழிபாட்டின் போது அச்சாம்பல் ஆசீர்வதிக்கப்பட்டு அதை குருவானவர் மக்களின் நெற்றியில் சிலுவை அடையாளத்தில் பூசுவது வழக்கம். நம்மில் தவம், தாழ்ச்சி தன்னொறுத்தல் உருவாக வேணடிய ஓர் அழைப்பை திருநீற்று புதனும் நமக்குத் தருகின்றது. விபூதி பைபிளில் வெறுமையின்-ஒன்றுமில்லாமையின் அடையாளம். மனிதனுடைய நிலையற்ற தன்மையையும், குறை நிறையையும் முற்றிலும் சார்புடைய நிலையையும், பாவ தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய பலவீன நிலைகளையும் குறிக்கின்றது. சாம்பல் மனித வாழ்வில் மன மாற்றத்திற்கும் அடையாளமுமாகும்.

**திருநீற்றுப் புதனும் ஏன் மாறி மாறி வருகிறது**

பொதுவான கிரகோரியன் கிறித்தவ நாட்காட்டிப்படி, அன்று இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒவ்வொரு ஆண்டு நிலையான திகதியில் இல்லாது மாறி மாறி கொண்டாடப்பட்டது. ஏனென்றால் பங்குனி, ஏப்ரல் மாதம் வருகின்ற முழுநிலா நாளையொட்டி வருகின்ற ஞாயிறு இவ்விழா கொண்டாடப்பட்டது. இது பண்டைய யுத மரபுப்படி அமைந்த பாஸகா விழா கணிப்பை அடிப்படையாகக் கொண்டது. இது அன்றைய பாஸ்கா பண்டிகையைக் கொண்டாடிய முறையைப் பின்பற்றியதாகும். எனவே, திருநீற்றுப் புதன் மாசி 4ஆம் நாளிலிருந்து பங்குனி 10ஆம் நாள் வரை ஏதாவது ஒரு புதனன்று வரலாம். அதாவது ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 21ஆம் திகதிக்கு பின்வரும் பௌர்ணமிக்கு அடுத்து வரும் ஞாயிறுக்கிழமை தான் ஈஸ்டர் கொண்டாடப்பட்டது. 21ஆம் திகதியே பௌர்ணமி ஞாயிறு வந்தால் அடுத்த ஞாயிறு கொண்டாடுவார்கள். இதனால் திருநீற்றுப் புதனும் மாறி மாறி வருகிறது.

**தவக்காலம் எத்தனை நாட்கள் கொண்டது**

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவுடன் முடிவடையும் இத்தவக்காலம் நாற்பது நாட்களை கொண்டது. திருநீற்றுப் புதனிலிருந்து 47 ஆம் நாளில் இயேசுவின் உயர்த்தெழுதல் விழா கொணடாடப்படுகிறது. ஆண்டவரின் நாள் என அழைக்கப்படும் ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்த்து தவக்காலம் நாற்பது நாட்கள் கொண்டது. தவக்காலத்தினுள் வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் தவ முயற்சிகளைக் கடைப்பிடிப்பது வழக்கமல்ல. ஞாயிற்றுக்கிழமை இயேசு உயிர்பெற்றெழுந்த நாள் ஆதலால் மகிழ்ச்சி நாள். நோன்பு நாளல்ல என்பது கிறித்தவர் கருத்து.

**பைபிளில் நாற்பது என்ற எண்**

பைபிளில் நாற்பது என்ற எண் பல்வேறு சிறப்பு அடையாளங்களைக் கொண்டுள்ளது. இதற்கான பைபிள் வரலாற்றுப்பின்னணி நோவா காலத்தில் நாற்பது நாட்கள் இரவும், பகலும் மழை பெய்தது. இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் நாற்பது ஆண்டுகள் பயணம் செய்தனர். மோயீசன் சீனாய் மலையில் கடவுளின் உடன்படிக்கை பலகையை, பத்துக் கற்பனைகளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு, நாற்பது நாட்கள் இரவும் பகலும் உண்ணாமலும், தண்ணீர் குடியாமலும் இருந்தார். எலியா நாற்பது நாட்கள் உண்ணாமலும், குடியாமலும், தொடர்ந்து நடந்து சென்று ஓரேப் என்ற கடவுளின் மலையை அடைந்தார். எசேக்கியேல் இஸ்ரயேல் மக்களின் சுமையை நாற்பது நாட்கள் சுமந்தார். ஆண்டவர் இயேசு தம் பணிவாழ்வினை தொடங்கு முன் தயாரிப்பாக நாற்பது நாட்கள் தவமிருந்து பரிசுத்த ஆவியாரால் நிரப்பப்பட்டு வழிநடத்தப்பட்டார். சாத்தானின் சோதனைகளை முறியடித்தார். இந்த நாற்பது நாட்களும் இயேசு செபத்தில் இறை தந்தையுடன் ஆழமான நெருக்கத்தில் இருந்தார். அது மட்டுமல்ல, தீமை எனும் மறை பொருளையும் அவர் எதிர்கொண்டார்.

தவக்காலம் தீமையை நன்மையால் வெல்லும் காலம் "நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்று திரு நீற்றுப்புதனன்று கத்தோலிக்கத் திருவழிபாட்டில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளை மையப்படுத்தி சிந்தித்தால் இந்த பைபிள் வார்த்தைகள் நம்மில் நம்பிக்கையற்ற ஒரு நிலையை உருவாக்குவதற்குப் பதில், நமது நிலையற்ற தன்மையையும், அதனை மாற்ற வல்ல இறைவனின் அருகாமையையும் நமக்குணர்த்துவதை நாம் காண முடியும். மண் என்ற அடையாளம் அழிவைக் குறிப்பதாகத் தெரிந்தாலும், நம்மில் ஒருவராய்ப் பிறந்து, இறந்து புதைக்கப்பட்டு, மீண்டும் உயிர்த்த இயேசுவின் வழியாக, இந்த மண்ணும் உயிர் தரும் சக்தி பெறுகின்றது. இந்த மண்ணில் தற்போதைய கலாசாரம், நன்மை, தீமை குறித்த உணர்வை இழந்திருந்தாலும், தீமையை நன்மையால் வெல்ல முடியும் என்பதை கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் தம் முழு சக்தியுடன் உலகிற்கு வலியுறுத்த வேண்டும் .

**உறவை புதுப்பிக்க வருவதே இத்தவக்காலம்**

இறை மனித உறவை புதுப்பித்துக்கொள்ள மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே உரையாடல் செய்ய நம்மை அழைக்கின்றது இக்காலம். நமது வாழ்வில் பல்வேறு வழிகளில் நம்மோடு உறவாடிய இறைவன்-இக்காலத்தில் தன் பாடுகளின் வழியாக நம்மோடு அவர் கொண்டுள்ள அன்பை-உறவை உறுதிப்படுத்த நமக்கு அழைப்பு விடுக்கின்ற காலம். இறைவாக்கினர்கள் வழியாக பேசிய இறைவன் நீதிதலைவர்-அரசர்கள் வழியாக செயற்பட்டு தொடர்ந்தும் மனித இனத்தின். இடறிய பாதையைச் சமன் செய்து அன்புறவை கட்டியெழுப்ப இறுதியாக அன்னைமரி வழியாக தன் அன்பு மகனை மனிதரிடம் தந்தார். தவக்காலம் உறவை வளர்க்க நமக்கு தரப்படும் அற்புதமான காலமாகும். நல்ல ஆரோக்கியமுள்ள சமூகத்தை கட்டியெழுப்புவதில் அக்கறை கொள்வோம். உறவிலே இறைவனை உயிர்ப்பிக்கச் செய்து, தெய்வ தரிசனம் பெறுவோம்.

**குறைகளை களைந்து, நிறைகளை காண அழைக்கும் காலமே தவக்காலம**

இயேசு 30ஆம் வயதிலிருந்து மூன்றாண்டு போதனைகளை மேற்கொண்டார். ஓய்வு உறக்கமின்றி காடுமேடுகளை கடந்தார். மூன்றாண்டு போதனைகள் முக்காலமும் உணர்ந்திடும் வண்ணம் இயேசுவின் பாடுகள் நமக்கு உணர்த்துகின்றது. அவர் ஏற்ற துன்ப, துயரங்கள், போராட்டங்கள், சவால்கள், அனைத்தும் நாம் நம் வாழ்க்கையை புரட்டி பார்த்து குறைகளை களைந்து நிறைகளை காண அழைக்கும் காலம். நமக்குள், நமது சமுதாயத்தில், அனைத்தும் நலமாக இல்லாததால், மனமாற்றங்களைத் தேடி நாம் இறைவனிடம் திரும்ப வேண்டும். இன்று இவ்வுலகில், கடவுள் ஒதுக்கப்படுகிறார். மீண்டும் அவரை வாழ்வின் மையத்திற்குக் கொண்டு வர தவக்காலம் எமக்கு உதவுகிறது. இயேசுவின் பாதச்சுவடுகளில் இடம்பெறும் இந்த ஆன்மீகப் புதுப்பித்தல் இன்று நம்மிடையே காணப்படும் ஆன்மீக மற்றும் பொருளாதார வறுமை வளர்ந்து வருவதை உணரவும், அதற்கு பதிலுரைக்கவும் நமக்கு அழைப்புவிடுக்கிறது. கடவுளின்றிச் செயற்பட முடியும் என்ற எண்ணமுடைய கலாசாரத்தின், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் செபிக்கக் கற்றுத்தராத ஒரு கலாசாரத்தின், வன்முறைகளையும் ஏழ்மையையும், சமுதாய அழிவுகளையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் ஒரு கலாசாரத்தின், அழுத்தங்களை நாம் முற்றிலும் உணர்ந்தவர்களாக, அவைகளை எதிர்த்து நிற்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றோம். தனியார்களாகவும் சமுதாயமாகவும் நற்செய்தியின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்கவும், நம் விசுவாசத்தின் மறையுண்மைகளை ஆழ்ந்து தியானிக்கவும், ஒறுத்தல் மற்றும் பிறரன்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கவும், நம் இதயங்களை இறை அருளுக்கும் நம் அடுத்தவரின் தேவைகளுக்கும் முழுமையாகத் திறக்கவும், இந்த தவக்காலம் நமக்கு உதவட்டும். நமக்குள்ளும், நம்மைச் சுற்றிலும் மீண்டும் புதியனவற்றை உருவாக்க நமக்குத் தரப்பட்டுள்ள தவக்காலத்தில் வாழ்வைப் புதுப்பித்து மன்னிப்பை இதயத்தில் நிறுத்தி நல்ல பண்பாட்டினை கரத்தில் ஏந்தி சமூகத்தில் வறு நடைபோட இறைவனை நோக்கி நாம் பயணத்தைத் துவக்குவோமா?


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:13<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:B.Eng/ உதவிபொறியியளாளர்<br>தொ.இ: B/3863 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 61சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/4407 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 45<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியளாளர்<br>தொ.இ: B/3868 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 87செவ் 8 இல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/4411 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BScலண்டன் NOT PR<br>தொ.இ: B/3889 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 35சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'4''<br>தகைமை/தொழில்:BSC IT/ பொறியியளாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4417 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 25செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/3891 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 32செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: G/4420 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# அகதிகளை விடாது துரத்தும் மரணம்; துருக்கியில் படகு கவிழ்ந்து 33பேர் பலி

(இஸ்தான்புல்)

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள நாடுகளிலிருந்து உயிரைப் பணயம் வைத்து படகுகளில் நீண்ட தூரம் பயணம் மேற்கொண்டுவரும் அகதிகளில் பலர் கடலில் பலியாகும் அவலநிலையில்துருக்கியில் வெவ்வேறு படகு விபத்துக்களில் சிக்கி 33 அகதிகள் பலியாகியுள்ளது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



உள்நாட்டு போர் நடைபெறும் சிரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். படகுகளில் பயணம் செய்யும் அவர்கள் கிரீஸ் வழியாக துருக்கி வந்து அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர்.


அவ்வாறு வரும் அகதிகள், படகுகள் கடலில் மூழ்கி விபத்துககுள்ளாகின்றன.

இந்த நிலையில், துருக்கியில் இருந்து ஏகியன் கடல் வழியாக கிரீஸ் செல்ல முயன்ற அகதிகள் இருவேறு விபத்துக்களில் சேர்த்து மொத்தம் 33 பேர் பலியானதாக துருக்கி ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

துருக்கியின் பாலிகேசிர் மாகாணத்தில் படகு மூழ்கியதில் 22 பேரும் இதைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் ஏகியன் கடற்கரை அருகே படகு மூழ்கியதில் 11 பேரும் என மொத்தம் 33 பேர் பலியாகினர். இந்த இரு படகில் சென்றவர்களும் கீரீஸ் தீவான லெஸ்பாஸ் செல்ல முயன்றனர் என்று துருக்கி செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (இ)




## வெள்ளை மாளிகையில் வைஃவை பிரச்சினை



அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையிலும் வை ஃபை இணைப்பு பிரச்சினைகள்உள்ளன என்றுஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆங்காங்கே வை ஃபை இணைப்பு கிடைக்காமல் இருப்பது 21ஆம் நூற்றாண்டின் ஒரு பிரச்சினை என தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் அவர் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையிலேயே பல இடங்களில் இணைப்பு கிடைப்பது மிகவும் கடினமாக உள்ளது என்றும், ஏராளமான பகுதிகளில் முற்றாக வை ஃபை வேலை செய்வதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினையால் தனது மகள்கள் எரிச்சலடைந்துள்ளனர் என்றும் அவர் அந்தப் பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அமெரிக்காவில் தேர்தல் நெருங்கிவரும் சூழலில், வை ஃபை பிரச்சினையை தீர்க்க தன்னால் முடிந்த நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், அடுத்த ஜனாதிபதி இதிலிருந்து விடுபடதான் முனைந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## ஏவுகணைத் தடுப்பு நிலையத்தை ஆசியாவில் உருவாக்கும் அமெரிக்கா


செய்மதியொன்றை விண்ணில் ஏவியுள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ள நிலையில், ஏவுகணைத் தடுப்பு நிலையமொன்றை ஆசியாவில் உருவாக்கும் நடவடிக்கையை, அமெரிக்கா விரைவில் ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

செய்மதியொன்றையே விண்ணில் ஏவியதாக வடகொரியா தெரிவிக்கின்ற போதிலும், அணுகுண்டை காவிச்செல்லும் ஏவுகணையைச் சோதிப்பதற்காகவே, இந்தச் செய்மதி ஏவப்பட்டதாக, அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் சந்தேகிக்கின்றன. இந்நிலையிலேயே, தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏவுகணைத் தடுப்புத் திட்டத்தை, கொரியத் தீபகற்பத்தில், விரைவிலேயே ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டால், சீனாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கையாக அது அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசியக் கண்டத்தில், அமெரிக்காவின் இராணுவ விஸ்தரிப்புகளை சீனா எதிர்த்து வருவதோடு, தென்கொரியாவின் அதிகளவிலான வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ள நாடாக சீனா காணப்படுவதால், சீனாவின் எதிர்ப்பும், முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இதேவேளை, வடகொரிய செய்மதி ஏவல் தொடர்பாக ஆராய்வதற்காக நியூயோர்க்கில் கூடிய ஐ.நா பாதுகாப்புச் சபை, வடகொரியாவின் நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது. அத்தோடு, ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட அணுகுண்டுச் சோதனைக்கும் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயற்பாடுகளை அச்சபை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நேபாள முன்னாள் பிரதமர் கொய்ராலா காலமானார்




நேபாளி காங்கிரஸ் கட்சி தலைவரும், நேபாள நாட்டின் முன்னாள் பிரதமருமான சுஷில் கொய்ராலா காலமானார். அவருக்கு வயது 79.

சுதந்திரத்துக்கு முந்தைய இந்தியாவின் பனாரஸ் நகரில் பிறந்த கொய்ராலா, நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராக அரசியலில் ஈடுபட்டு சுமார் 16 ஆண்டுகாலம் இந்தியாவில் தஞ்சம் அடைந்திருந்தார். விமான கடத்தல் தொடர்பாக இந்தியாவில் உள்ள சிறைகளில் 3 ஆண்டுகள் தண்டனை அனுபவித்த இவர், கடந்த 10-2-2014 அன்று நேபாள நாட்டின் பிரதமராக பதவி ஏற்றார்.

நேபாளத்தில் கடந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தத்துக்கு முக்கிய காரணமாக கருதப்படும் கொயராலா, நுரையீரல் சார்ந்த கோளாறுகளால் பாதிக்கப்பட்டிருந்தார். இதற்காக அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று நாடு திரும்பிய இவர், தலைநகர் காத்மண்டுவின் புறநகர் பகுதியில் உள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை 12.50 மணிக்கு காலமானார்.

நுரையீரல் அழற்சி நோயால் மரணம் அடைந்த சுஷீல் கொய்ராலாவின் உடல் காத்மண்டு நகரில் உள்ள நேபாளி காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (இ)

## சிவப்புக் கம்பள வரவேற்பால் சர்ச்சையில் சிக்கிய ஜனாதிபதி



எகிப்திய ஜனாதிபதி கடந்து சென்ற 5 கிலோ மீற்றர் தூரம் சிவப்பு கம்பள வரவேற்பு அளித்துள்ள சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

எகிப்திய ஜனாதிபதி அப்தேல் பத்தா கெய்ரோவின் புறநகர் பகுதியில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொள்ள அண்மையில் சென்றுள்ளார்.

இந்த விழாவானது அப்பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வீடுகளை திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்குவதேயாகும்.

விழாவினை ஏற்பாடு செய்திருந்த அமைப்பாளர்கள் ஜனாதிபதி புறப்படும் பகுதியில் இருந்து விழா மேடை வரை சிவப்பு கம்பளம் விரித்து அவரை வரவேற்றுள்ளனர்.

இச்சம்பவம் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஏழைகளுக்கு வீடு வழங்கும் விழாவில் கலந்துகொள்ளும் ஜனாதிபதியின் வாகனங்கள் 5 கிலோ மீற்றர் சிவப்பு கம்பளத்தில் கடந்து வந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த நாட்டின் முக்கிய இராணுவ அதிகாரி, இது சிறப்பான அனுபவம் என்றும் எகிப்தியர்களால் எந்தவித விழாவினையும் திறம்பட நடத்த முடியும் என நிரூபித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எகிப்தில் மொத்த சனத்தொகையில் 25 சதவீதத்தினர் வறுமை கோட்டின் கீழ் நிலையில் இருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

தன் மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையை செய்தாலும் சூழ்நிலையை அனுசரித்து செய். அது சிறந்து விளங்கும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தனியார் மினிபஸ் சங்கத்தினருக்கு ஓர் அன்பு மடல்

தனியார் மினிபஸ் சங்கத்தினருக்கு அன்பு வணக்கம். போக்குவரத்துப் பணியில் தாங்கள் ஆற்றும் சேவைக்கு முதலில் எம் நன்றிகள்.

ஒரு போட்டியான தொழில்துறையில் உங்களை நிலைநிறுத்துவதில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் நிறையவே உண்டு.

எப்படித்தான் ஓடிஓடி உழைத்தாலும் லீசிங் கட்டவும் கராச்சுக்குக் கொடுக்கவும் உழைத்த வருமானம் போதவில்லை என்ற உங்களின் கவலைகளை அறியாதவர்கள் அல்ல நாம்.

எனினும் தனியார் மினிபஸ் சாரதிகள் சிலர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதால் மிக மோசமான விபத்துக்களும் உயிர் இழப்புகளும் ஏற்பட்டு விடுகின்றன.

அண்மையில் திருநெல்வேலியில் வேகமாக வந்த மினிபஸ் ஒன்று ஆட்டோவை, மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளி மிகப்பெரியதொரு நாசத்தை விளைவித்தது தாங்கள் அறியாததல்ல.

இவ் விபத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் பாலகன் ஒருவன் படுகாயமுற்று நேற்றுமுன்தினம் உயிரிழந்து போன சம்பவத்தை எந்த வகையிலும் ஜீரணிக்க முடியவில்லை.

இந்தப் பாலகன் உயிர் பிழைக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்காதவர்கள் இருந்திருக்க மாட்டார்கள். அந்தளவுக்கு அந்தக் குழந்தைக்கு நேர்ந்த கதி மனித மனங்களை உலுக்கி விட்டது.

நேற்றுமுன்தினம் அந்தப் பாலகன் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டவர்களால் நிம்மதியாக உறங்கமுடியவில்லை.

பாடசாலை முடிந்து தாயுடன் ஆட்டோவில் மிகப் பாதுகாப்பாகப் பயணித்த அந்தப் பாலகனின் உயிரை ஒரு மினிபஸ் சாரதியின் பொறுப்பற்ற செயல் பறித்துக் கொண்டது என்ற நிஜத்தை நீங்கள் யாரும் சாதாரணமாக நினைத்துவிட மாட்டீர்கள்.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்சை முந்துவதற்காக இப்படி ஒரு அநியாயம் அட்டூழியம் நடந்து முடிந்துள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் முன்பும் நடந்துள்ளனவாயினும் முன்னைய அனுபவத்தில் இருந்து நாம் திருத்தங்களைக் கற்றுக் கொள்வில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

எனவே திருநெல்வேலியில் நடந்த மிகமோசமான விபத்தில் உயிர் இழந்து போன சுவஸ்திகன் என்ற பாலகனுக்கு நீங்கள் அஞ்சலி செலுத்த வேண்டும் என்று நினைத்தால்,

அந்தக் குழந்தையின் உயிரைப் பறித்ததில் உங்கள் மனச்சாட்சி உங்களை உறுத்தினால் இன்று முதல் வேகமாக மினிபஸ்சை செலுத்த மாட்டோம்; போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்சை முந்துகின்ற முயற்சியில் ஈடுபடமாட்டோம் என்று சத்தியம் செய்து கொள்ளுங்கள்.

கூடவே போக்குவரத்து விதிமுறைகளை நூறு வீதம் கடைப்பிடிப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். இது ஒன்றுதான் அந்தக் குழந்தை க்கு நீங்கள் செலுத்தும் உள்ளார்ந்தமான அஞ் சலியாகும்.

ஒரு இழப்பிலிருந்து இரக்கத்தைக் கற்றுக் கொள்வது; குழந்தையின் இழப்பால் அந்தக் குடும் பம் அனுபவிக்கும் வேதனையை அறிந்து கொள் வது; ஒரு பாலகன் வீதியால் செல்வதற்குக் கூட நாங்கள் ஆபத்தானவர்களாக இருக்கிறோம் என் பதை உணர்ந்து கொள்வது, என்பன சரியான முறையில் மினி பஸ் சாரதிகளால் உள்வாங்கப்பட்டால் அது மிகப்பெரிய மாற்றங்களைத் தந்து விபத்துக்களைக் கணிசமாகக் குறைக்கும்.

ஆக, தனியார் மினிபஸ் சங்கத்தினராகிய நீங்கள் அத்தனை வாகனங்கள் சார்ந்த அமைப்புகளுக்கும் முன்மாதிரியாக, விபத்தைத் தடுப்போம் என்ற சத்தியத்தை பாலகன் சுவஸ்திகனின் இழப்பில் இருந்து உரக்கச் சொல்லுங்கள்.

புதிய அத்தியாயத்தை தோற்றுவியுங்கள். இது உங்களால் நிச்சயம் முடியும்.

### சிறுவர் கொள்ளைக் கும்பலான
## நிஞ்சா குறூப் கைது

கம்பளையைக் கலக்கிக் கொண்டிருந்த சிறுவர் கொள்ளைக் கும்பல் ஒன்றைக் கைது செய்து பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக கம்பளை பிரதேசத்தில் ஐந்து பேரைக் கொண்ட கொள்ளைக் கும்பல் ஒன்று தனியாக வீட்டில் இருக்கும் பெண்களைக் குறிவைத்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்திருந்தது.

கத்தி முனையில் அச்சுறுத்தி பெண்களின் நகைகளை பறித்துச் செல்வது, கையடக்கத் தொலைபேசி திருட்டு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

நிஞ்சா பாணியில் முகத்தை முழுமையாக மறைத்துக் கொண்டு கொள்ளையடித்த இந்தக்கும்பல் காரணமாக கம்பளை பிரதேசத்தில் பெரும் அச்சம் ஒன்று பரவியிருந்தது.

இந்நிலையில் குறித்த நிஞ்சா குழுவினரை கம்பளை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 17,18, 19, 20 வயதுடைய இளைஞர்கள் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கம்பளை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட இவர்களை எதிர்வரும் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(இ)

## காதல் ஜோடிக்கு கத்திக்குத்து

(கொழும்பு)

பதுளை, உத்ஹித்த பூங்காவில் காதல் ஜோடியொன்றை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொண்டிருந்த இளைஞன ஒருவனை, பூங்காவின காவலாளிகள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்த காதல் ஜோடி, பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (இ)

## யோஷிதவின் முன்னாள் காதலி புறக்கோட்டையில்

(கொழும்பு)

கைது செய்யப்படுவார் என பரவலாக ஊடகங்களில் பேசப்பட்ட யசாரா வெளிநாடு சென்றிருப்பதாக வெளியாகிய தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என தெரிய வந்துள்ளது.

இந்த விடயத்தை யசாராவே தனது பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்துள்ளார்.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் நிதி மோசடி குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுத்துவரும் நிலையிலேயே அவர் கைது செய்யப்படலாம் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விசாரணைகளில் கடந்த வாரம் யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட மேலும் ஐவர கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தொலைக்காட்சி நிறுவனத்தில் பொறுப்பான பதவியொன்றில் இருந்த யசாரா அபேநாயக்கவும் விரைவில் கைது செய்யப்படலாம் என ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் இதற்கு தனது பேஸ்புக்கின் ஊடாக பதிலளித்துள்ள யசாரா அபேநாயக்க, யசாரா வெளிநாட்டு சென்றுள்ளாராம்,

எனக் கென்றால் வெளிநாடு செல்ல முடியாது போயுள்ளது.

இன்று நான் புறக் கோட்டை சென்றிருந்தேன் என குறிப்பிட்டு தனது பேஸ்புக் கணக்கில் தகவல் வெளியிட்டுள்ளார்.

இவர் யோஷிதவின் முன்னாள் காதலி எனவும் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## 50 ஆயிரம் ரூபாய் வழங்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பணிப்பு

ரயில் பயணியின் மண்டையை பிளந்த குற்றத்துக்காக அப்பயணிக்கு 50 ஆயிரம் ரூபாவை நட்ட ஈடாக வழங்குமாறு கொழும்பு மாவட்ட நீதவான் அமாலி ரணவீர, பொலிஸ்மா அதிபருக்கு (ஐ.ஜி.பி) உத்தரவிட்டார்.

ரயில் சேவையாளர்கள் வேலை நிறுத்தத்தின் போது, கோட்டை ரயில் நிலையத்தில வைத்து பொலிஸாரினால் மேற்கொளளப்பட்ட தாக்குதலில், ரயில் பயணி யொருவரின் மண்டை பிள ந்துவட்டது. 2014ஆம் ஆண்டு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த பயணி, கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர், பொலிஸ்மா அதிபர் மறறும் சட்டமா அதிபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார். அவ்வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்ட போதே நீதவான் மேற் கண்டவாறு உத்தரவிட்டார். (இ)

## சர்வதேச சாரணர் ஒன்றுகூடலில் பங்குபற்றும் வவுனியா மாணவன்

சர்வதேச சாரணர் ஒன்றுகூடல் மத்திய கிழக்கின் சார்ஜா நகரில் இடம்பெற்று வருகிறது.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமான மேற்படி சாரணர் ஒன்றுகூடலில் இலங்கைப் பிரதிநிதியாக வவுனியாவைச் சேர்ந்த ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக முகாமைத்துவ பீட மாணவன் ஶ்ரீகரன் கேசவன் பங்குபற்றுகிறார்.

கடந்த பத்து நாட்களாக இடம்பெற்றுவரும் மேற்படி சர்வதேச சாரணர் ஒன்றுகூடலின் இறுதிநாள் இன்றாகும்.

பிரஸ்தாப மாணவன் 2012ஆம் ஆண்டுக்கான இலங்கையின் சாரணர் உயர்விருதான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## ஒலிம்பியாட் விஞ்ஞான போட்டி சனிக்கிழமை

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையான வலய மட்டத்திலான ஒலிம்பியாட் விஞ்ஞானப்போட்டி-2016 எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். போட்டியில் பங்குகொள்ளும் மாணவர்கள் பொறுப்பாசிரியருடன் உரிய நேரத்திறகு முன்னதாக வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (3-15)

## வலுவிழந்தோர் பொதுக்கூட்டம்

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட ஒளிரும் வாழ்வும் வலுவிழந்தோர் அமைப்பின் மாதாந்த பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தண்ணீரூற்று ஊற்றங்கரை பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல வலுவிழந்தோரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் திருமதி மயூரன் அனந்தினி கேட்டுள்ளார். (3-292)

## குடும்பப் பெண்ணுக்கு தீக்காயம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தில் வீட்டுக் குப்பைகளைக் கூட்டி மண்ணெய் ஊற்றி தீ மூட்டிய பொழுது ஆடையில் தீ பற்றியதனால் தீயினுள் விழுந்து குடும்பப் பெண் ஒருவர் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

நேற்று முன்தினம் பி.ப 3 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. எரிகாயங்களுக்குள்ளான பிரஸ்தாப பெண் முல்லைத்தீவு மாஞ்சோலை பொது வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாபப் பெண் ஏற்கனவே வலிப்பு நோயால் பாதிகப்பட்டிருந்தாக தெரிவிக்கப்படுகிறது. (3-292)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்த வகையில் 11.02.2016 வியாழன் யாழ்.பிரதேசத்தில் இணுவில் வங்கியடி வீதி, இணுவில் தியேட்டர் வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம், மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, 2ம் குறுக்குத்தெரு, மதவுவைத்த குளம், மூன்றுமுறிப்பு, தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பூ-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, கார்கில்ஸ் பூட் சிற்றி, மண்டெரின் ஆடைத்தொழிற்சாலை, Kowloom ஆடைத் தொழிற்சாலை, குளோப் அரிசி ஆலை, 2 ஏசை படை முகாம், TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## டெங்கு பெருகும் சூழலைப் பேணிய 5 பேருக்கு 50,000 ரூபாய் தண்டம்

அளவெட்டி பகுதியில்டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக சுற்றுப்புறச் சூழலை வைத்திருந்த குற்றத்திற்காக அப்பகுதியை சேர்ந்த 5 பேருக்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளார்.

அளவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அளவெட்டி மேற்கு பகுதியில் கடந்த மாதம் ஜனவரி 23 ஆம் திகதி டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக சுற்றுப்புறச் சூழலை வைத்திருந்த 7 பேருக்கு எதிராக கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதார பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அன்றைய தினம் குறித்த 7 பேரில் இரண்டு பேர் மன்றில சமுகமளித்திருந்த நிலையில் அவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து தீர்ப்பளித்ததுடன் ஏனைய 5 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது. குறித்த 5 பேரும நேற்று முன்தினம் மன்றில் ஆஜராகியிருந்த நிலையில் அவர்கள் 5 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். (இ-9)

# நாட்டின் மதிப்பு சர்வதேச ரீதியில் அதிகரித்துள்ளது

## அமைச்சர் அத்துகோரள பெருமிதம்



**(கொழும்பு)**


**சர்வதேசத்தில் இலங்கையின் மதிப்பு இன்று அதிகரித்து காணப்படுகிறது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றமே இதற்குக் காரணம் என்றும் இச் சர்வதேச மதிப்பானது கல்லடித்து கொல்லப்படவிருந்த பெண்ணின் உயிரை பாதுகாக்குமளவிற்கு காணப்படுகிறது என்று குருநாகல பிரதேசத்தில் நடைபெற்ற விழாவொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகின் கவனத்தை பெற்ற இனமாக நாம் திகழ்கின்றோம். யுத்தக் குற்றங்கள் தொடர்பாக கூறப் படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதில ளிக்கும் வகையில் தேசிய பொறி முறையொன்று அமைத்து அத னூடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதிக்கும், பிரதம ருக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத் துள்ளது என்றும் அமைச்சர் சுட் டிக்காட்டினார். (இ)

# ஊவாவை அழித்தவர் ஷசீந்திர ராஜபக்ஷவே

## விஜயமுனி சொய்சா குற்றச்சாட்டு



வெள்ளையர்களுக்கு பின்னர் ஊவாவுக்கு பாரிய அழிவை முன்னாள் முதலமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷவே ஏற்படுத்தியதாக அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் மகிந்த ராஜபக்ஷவையும் தோற்கடிக்கும் முதல் வேட்டு ஊவாவிலேயே தீர்க்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். வெலிமடை பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார். ஷசீந்திர ராஜபக்ஷ முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் பதுளை பக்கம் வரவில்லை. அவர் மொனராகலை மாவட்டத்திற்கு மாத்திரமே பணிகளை செய்தார். பதுளையை அவர் மறந்து போனார்.

மொனராகலையில் பொருட்களை விநியோகிக்க 7 ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவு செய்தார். தேர்தலில் வெற்றிபெற மொனராகலைக்கு பொருட்களை விநியோகிக்க தேவையில்லை.

தற்போது எங்களுக்கு பணிகளைச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சியினரா? அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரா? என்பது தற்போது எமக்கு பிரச்சினையில்லை எனவும் அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா தெரிவித்தார். (இ)

# அமைச்சுப் பதவியை எமது கட்சி இழக்க முதலமைச்சர் சதிவேலை

(கொழும்பு)

முதலமைச்சரின் சதியினால் எமது கட்சி அமைச்சுப் பதவியை இழந்தது என ஜனநாயகக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி அருண தீபால் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சுகாதார அமைச்சுப் பதவி ஜனநாயகக் கட்சிக்கு வழங்கப்படும் என ஊடகங்களில் முன்னதாக தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் நேற்று முன்தினம் சுதந்திரக் கட்சியின் லால் மெண்டீஸ் மாகாண சுகாதார அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று ஜனநாயகக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் அருண தீபாலிடம் வினவிய போது,

எமது கட்சிக்கு அமைச்சுப் பதவியொன்று வழங்க இணக்கம் காணப்பட்டிருந்தது. எனினும், முதலமைச்சர் இசுர தேவப்பிரிய செய்த சதி வேலை காரணமாக அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை.

அமைச்சுப் பதவி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சொந்தமானதல்ல. உண்மையில் அது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிறு கட்சியொன்றுக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தப் பதவி ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் திடீரென இந்த தீர்மானம் மாற்றப்பட்டதற்கு முதலமைச்சரின் சதி வேலையே காரணமாகும்.

மேல் மாகாண சுகாதார அமைச்சுப் பதவியை சுதந்திரக் கட்சியை சேர்ந்த கீர்த்தி காரியவசத்திற்கு வழங்குமாறு 43 மாகாணசபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஜனாதிபதியிடம் கோரியிருந்த போது வழங்காது, சுதந்திரக் கட்சியின் சுமித் லால் மெண்டீஸிற்கு அந்தப் பதவியை வழங்கியமையின் ஊடாக் சதித் திட்டம் வெளிச்சமாகியுள்ளது என அருண தீபால் மேலும் தெரிவித்துள்ளார். (இ)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 628

Search for people, places and things Nagendram Home


கம்சா




சுதா சுதாகரன்




மொஹமட்




மயூ மயூரன்




ஹரிகரன்




இக்பால்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நம்ப முடியாத தாலேயே...

இலங்கைக்கான பயணத்தின் முடிவில் நேற்று பிற்பகல் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

முன்னைய மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட வேளை காணப்பட்டதை விட, தற்போது அதிகளவு நட்புறவான சூழல் காணப்படுகிறது.

கடந்த ஒரு ஆண்டில் இலங்கை முன்னேற்றங்களைச் சந்தித்துள்ளது, ஊடகங்களுக்கு இது நன்கு தெரியும். நீங்கள் விரும்பியதை எழுதுவதற்கு அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அச்சமான சூழ்நிலை கொழும்பிலும் தெற்கிலும் கணிசமாக குறைந்துள்ள போதும், வடக்கு, கிழக்கில் அது உருமாற்றமடைந்துள்ளது, ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது இன்னமும் தொடர்கிறது.

முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற போதிலும் இந்த முன்னேற்றத்தின் அளவு குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

வெள்ளைவான் கடத்தல்கள், சித்திரவதைகள் குறித்த முறைப்பாடுகள் குறைவடைந்துள்ள போதிலும், புதிய முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்முறை சுதந்திரதின நிகழ்வில் தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்பட்டமையானது சிறந்த விடயம். அது நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

மனித உரிமையை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

போரின்போது இலங்கை இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள்ஆகிய இரு தரப்பினாலும்பொது மக்கள் இடர்களை எதிர் நோக்கி இருந்தனர் என்பதை, எனது பயணத்தில் கண்டறிய முடிந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி, மலையகத்திலுள்ள தமிழ் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

போரில் பாதிக்கப்பட்ட உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு உதவ இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது.

இலங்கை இராணுவம் பொது மக்களின் நிலங்களை மீள கையளிப்பதை துரிதப்படுத்த வேண்டும.

நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சிறைப்பிடிக்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்க இலங்கை அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நாட்டுக்கு எந்த வகையிலும் அச்சுறுத்தலாக அமையாது.

இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் குறித்து தான் வழங்கிய வாக்குறுகளில் இருந்து பின்வாங்குகிறது என்ற அச்சத்தை பலர் என்னிடம் வெளியிட்டிருந்தனர்.

எனினும் இன்று (நேற்று) காலை இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக உத்தரவாதத்தை வழங்கியுள்ளனர்.

ஜெனிவா தீர்மானம் குறித்து பல கட்டுக்கதைகள் உலாவுகின்றன, இலங்கையர்கள் தீர்மானத்தை சரியாக புரிந்து கொள்ளவேண்டும், அவர்கள் கடந்த காலங்களின் பயங்கரங்களை எதிர்கொண்டு அவற்றை தோற்கடிக்க வேண்டும்.

இலங்கையில் மிகச் சிறந்த நீதிபதிகள், சட்டவாளர்கள், நீதியை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் உள்ளனர். ஆனால் கடந்த ஆண்டுகளில் நீதிப் பொறிமுறை அதிகளவு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக, நிலையற்றதாக, நம்பமுடியாததாக காணப்பட்டிருந்தது.

கடந்த சில பத்தாண்டுகளாக நாட்டின் வரலாற்றில் நீதித்துறையின் தோல்விகள் பரவிக்கிடக்கின்றன. கிட்டத்தட்ட அனைவரும் இதனை ஏற்றுக்கொள்கின்றனர்.

கடந்த ஜனவரி 27ஆம் நாள் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைப் பற்றி மிகப் பெரியளவில் உரையாற்றியது போற்றத்தக்கது.

விசாரணைகளின் தோல்விகள் குறித்து, நீதிமன்ற அறையினுள் அத்துமீறி நுழைந்தது குறித்து, தண்டனை விதிக்கப்படாத குற்றங்கள் குறித்து ஒவ்வொரு வாரமும் செய்திகள் வெளியாகின்றன.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், குற்றங்கள் பரவலாக காணப்படுகின்றன. அவற்றுடன் தொடர்புடையவர்களாக பெருமளவில் இலங்கை படைகளில் அங்கம் வகிப்போரே இருக்கின்றனர்.

இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட அனைத்துலக குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றிய பொறுப்புக்கூறல் பொறிமுறையில், அனைத்துலக பங்களிப்பு பரிந்துரைக்கப்பட்டமைக்கு இவையே 'காரணம்.

இது நடைமுறைப் பிரச்சினைகளுக்கு, தீர்வுகாணக் கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு யோசனை. எனறும் அவர் குறிப்பிட்டார். (செ-12)

# முதலமைச்சரால் என்னை...

மென்றே திட்டமிட்டு செயற்படுகின்றார் என ஐங்கரநேசனும், முதலமைச்சர் தன்னை கட்டுப்படுத்த முடியாது என சிவஞானமும் முட்டி மோதிக் கொண்டனர். இவ்வாறான கடும் வாக்குவாதங்களை நேற்றைய தினம் சபையில் தொடர்ச்சியாக பல முறை கேட்க முடிந்தது.

இம்மோதல்களில் ஏனைய உறுப்பினர்கள் சிலர் தமக்கு பிடித்தவர்களுக்கு வக்காலத்து வாங்கினர். இன்னும் சிலர் சபை அமர்விற்கு வராததோடு மேலும் ஒரு சிலர் இம் மோதல்களின் போது வெளியேறியிருந்தனர். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த மோதல்களை வேடிக்கை பார்த்து கொண்டிருந்ததோடு இவ்வாறெல்லாம் சண்டை பிடிக்காதீர்கள் என இடையிடையே அறிவுரையும் கூறினார்கள்.

வடக்கு மாகாண சபையின் நாற்பத்து ஐந்தாவது அமர்வு நேற்றையதினம் பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது சபையின் ஆரம்பம் முதலே ஆளும் தரப்பு உறுப்பினர்கள் உரையாற்றும் போது சில உறுப்பினர்களைக் குத்தி குறை பேசிக்கொண்டே இருநதனர். கூட்டுறவு சங்கங்களிற்கு சீமெந்து விநியோகம் தொடர்பிலான விடயம் எடுக்கப்பட்ட போது, மோதல் ஆரம்பமாகியது.

குறித்த திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்று இருப்பதாக உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டி விவசாய அமைச்சரினை கடிந்து கொண்டனர். இதன் பின்னர் கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்றதாக கூறப்படும் ஊழல் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதன் போது அவைத்தலைவர் சிவஞானம்மேற்படி சங்கத்தில் ஊழல் ஊழல் என அடிக்கடி கூறிக்கொண்டே இருந்தார்.

இதன்போது மேற்படி விடயம் தொடர்பில் விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளதாகவும், ஆகவே அந்த விசாரணை குழுவின் விசாரணை முடிவடையும் முன்னர் நாம் தீர்ப்புக் கூற முடியாது எனவும் ஆகவே அதனைப் பற்றி கதைப்பதை நிறுத்துமாறு முதலமைச்சர் அவைத்தலைவரிடம் கோரினார்.

எனினும் முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத அவைத்தலைவர் நீங்கள் என்னை கட்டுப்படுத்த முடியாது என மோதலை மீளவும் ஆரம்பித்து வைத்தார்.

அவைத்தலைவர் கூறிய மேற்படி விடயத்தை சபை குறிப்பில் இருந்து நீக்குமாறும், இல்லாவிட்டால் அது தவறான முன்னுதாரணமாக அமைந்து விடும் எனவும் உறுப்பினர் சரவேஸ்வரன் கருத்தொன்றை முன்வைத்தார்.

எனினும் அதனை நீக்க முடியாது என சிவஞானம் அடம்பிடிக்க, நீங்கள் சர்வாதிகாரி போல் நெடுக செயற்படாதீர்கள் என சிவஞானத்தை கடிந்துகொண்டார் சிவாஜிலிங்கம்.

இதன் பின்னர் எழுந்த பசுபதி அரியரட்ணம் குறித்த குழுவின் விசாரணை எதிர்வரும் ஒரு மாத காலப்பகுதிக்குள் நிறைவடைந்து விடும். ஆகையால் அதுவரை இந்த விடயத்தை சபையில் எடுத்து கொள்வதனை தவிர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார்.

அவரது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு முதலாவது மோதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்றினை கொண்டுவருவதாக கூறி உறுப்பினர் லிங்கநாதன் விவசாய அமைச்சர் மீதான அதிருப்திகளை வெளிப்படுத்தினார்.

இரண்டு ஆண்டுகளாகியும் வடக்கு மாகாண சபை குறிப்பிடத்தக்க எதனையும் சாதிக்கவில்லை. விவசாய அமைச்சர் தன்னிச்சையான முறையில் செயற்பட்டு வருகின்றார்.

அவர் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என தனது உரையை ஆரம்பிக்கும் போதே இடையில் குறுக்கிட்ட விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், அவைத் தலைவர் சிவஞானம் நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயத்தை பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை என்ற விடயத்தில் அனுமதி கொடுத்து,

திட்டமிட்டு தன்னில் சேறு பூசுவதற்கு துணை போகின்றார் என அமைச்சர் ஐங்கரநேசன் அவைத்தலைவர் சிவஞானம் மீது நேரடியாகவே குற்றம் சாட்டினார். இதன் பின்னர் இரணைமடு குடிநீர் திட்டம் தொடர்பான விவாதம் ஆரம்பமானது. இதன் போது மேற்படி குடிநீர்த்திட்டத்திற்கு விவசாய அமைச்சருக்கு ஆதரவாக தான் நின்றதாகவும், ஆனால் அதனை பயன்படுத்தி அமைச்சர் தன்னை முட்டாளாக்கி விட்டார் என உறுப்பினர் கே.சயந்தன் நேரடியாகவே குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இதன் போது ஆவேசமடைந்த அமைச்சர், தன்னை ஒரு உறுப்பினர் அவமதிப்பு செய்கின்றார். நீங்கள் பார்த்து கொண்டு உள்ளீர்கள். நாங்கள் ஏற்கெனவே காதில் பூ வைத்து விட்டோம். பிரதி அவைத் தலைவர் அரை நாள் அவையை நடத்தியிருந்தாலும் சிறப்பாக நடத்தியிருந்தார். ஆனால் நீங்கள்?? என மீண்டும் சிவஞானத்தை தாக்கினார் ஐங்கரநேசன்.

இதன்பின்னர் விவசாய அமைச்சு தொடர்பான பிரேரணை ஒன்று லிங்கநாதனால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இம்மோதல்களினால் அவையே நேற்றைய தினம் அதிர்ந்தது. நீண்டகாலமாக உறுப்பினர்கள், அமைச்சர்கள், அவைத்தலைவர், முதலமைச்சரிடையே நிலவி வந்த பனிப்போர் நேற்றைய தினம் வெளிப்படையாகவே முட்டி மோதி வெடித்ததனை சபையில் அவதானிக்க முடிந்தது. (செ-4)

# “ முதலமைச்...

உறுப்பினர் கேசவன் சயந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் கடந்த இரு வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பில் விசாரணைக்குட்படுத்தவேண்டுமென்ற பிரேரணை நேற்று நடைபெற்ற அமர்வின் போது நிறைவேற்றப்பட்டது.

இப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் அமைச்சரினை யார் வசாரணை செய்வது என்ற கேள்வி எழுந்தது.

இதன் போது விவசாய அமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்களை ஒரு விசாரணைக் குழு அமைத்து அதிகாரிகள் மூலம் விசாரணைக் குட்படுத்த வேண்டும்என பிரேரணையை முன்மொழிந்த லிங்கநாதனால் கூறப்பட்டது.

இதன்போது குறுக்கிட்ட சயந்தன், அமைச்சர் ஒருவரை அதிகாரிகள் விசாரணை செய்ய இடமளிக்கக் கூடாது.

எமக்கும் அமைச்சர் ஐங்கரநேசன் எனும் தனி நபருக்கும் பிரச்சனை அல்ல. விவசாய அமைச் சர் ஐங்கரநேசனுடனேயே எமக்குப் பிரச்சினை உண்டு.

எவ்வாறு இருப்பினும் அமைச்சர் ஒருவரை அதே தர நிலையிலுள்ள முதலமைச்சரே விசாரணை மேற்கொள்ள முடியும் என சயந்தன் கூறினார்.

சயந்தனின் கருத்தும் பிரேரணைக்குள் உள்வாங்கப்பட்டு திருத்தத்துடன் பிரேரணை எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. (செ-4)

# விவசாய அமைச்சு மீது...

கொண்டுவரப்பட்ட இப் பிரேரணை எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் கடந்த வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட, இரணைமடு நீர்ப்பாசன திட்டம் தொடர்பிலான வடக்கு மாகாண் சபையின் செயற்பாடுகள், பாதீன ஒழிப்பு தொடர்பான செயற்திட்டங்கள்,

பளைப்பிரதேசத்தில் அமைககப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பான விடயம், சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைதல் தொடர்பில் எமது பங்குபற்றுதலும் செயற்பாடுகளும், மருதங்கேணி கடல் நீரினை நன்னீராக்கும் செயற்திட்டம், கார்த்திகை மாத மர நடுகை உறுப்பினர்களோடு கலந்தாலோ சிக்காமல் அவர்களது பங்கு பற்றுதல் இன்றியும் முன்னெடுக்கப்பட்டமை,

அனர்த்த நிவாரணங்களை உறுப்பினர்களோடு கலந்தாலோசிக்காமல் வழங்கப்பட்டமை, ஜனரஞ்சக நிகழ்வுகளாக உழவர் திருநாள், கார்த்திகை மரம் நடுகை மாத தொடக்க நிகழ்வு, கார்த்திகை மலர்க் கண்காட்சி, விவசாய தினம், பேரிடர் தவிர்ப்பு நாள், மண் தினம், போன்றன பேரவையின் அனுமதி இன்றியும் அமைச்சரவையின் உரிய அங்கீகாரம் இன்றியும் முன்னேடுக்கப்பட்டமையும் அதுகுறித்த நிதி தொடர்பிலான வெளிப்படைத்தனமை இன்மை.

கூட்டுறவுத்துறையில் இடம்பெற்றுள்ள பல்வேறு முறைகேடுகள் இதுவரை உரிய அமைப்பில் சீரமைக்கப்படாமை, விவசாயத்துறையில் எத்தனையோ செயற்திட்டங்கள் கருத்தில் எடுக்கப்படாமை, சிறு குளங்களை புனரமைக்கும் மத்திய அமைச்சின் அழைப்பை நிராகரித்தமை போன்ற பல்வேறு திட்டங்களில் முறைகேடுகள் இடம்பெற்று இருப்பதாக சுட்டிக்காட்டி,

இவற்றுக்கு விசாரணைக் குழு ஒன்றை அமைத்து விசாரணைக் குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் லிங்கநாதன் கோரினார்.

எனினும் உறுப்பினர்கள் சிலரது கோரிக்கைக்கு அமைய வடக்கு முதலமைச்சரே மேற்படி முறைகேடுகள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைய முதலமைச்சரை கோரும் பிரேரணையாக திருத்தம் செய்யப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது. (செ-4)

# ஐ.நா.# கைதிகள் # பொது...

திருந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விகனேஸ்வரனைச் சந்தித்த போது தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதை விட, அவர்களின் வழக்குகளை துரிதமாக விசாரணை செய்து முடிப்பதே சிறந்தது என வடமாகாண முதலமைச்சரிடம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் விரும்பவில்லை என்று ஊடகங்களில் வெளியான செய்திகளை அவரது பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளருடன் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவரது பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் விளக்கம் அளிக்கையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரால் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஊடகங்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளன.

உண்மையில், அரசியல் கைதிகள் குற்றங்களில் ஈடுபட்டிருந்தமை தொடர்பில் போதிய ஆதாரங்கள் இருந்து தண்டனை வழங்கப்படும் போது, அவர்கள் ஏற்கெனவே தடுப்புக்காவலில் இருந்த காலப்பகுதியைக் கருத்தில் கொண்டு அவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும்.

இல்லையேல், அவர்கள் மீது குற்றம்சாட்டும் அளவுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லையென்றால், அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றே ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் கூறியிருந்தார் என்று ருபேர்ட் கொல்வில் விளக்கம் அளித்துள்ளார். (செ-11)

**NJT** பட்டப்படிப்புகள் பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி.
பேராதனை B.A (Final)
தமிழ்
திரு. K.தர்மராஜா
ஆரம்பம் : 13.02.2016 (12.00 மணி)
அனைத்துப் பாடங்களும் நடைபெறும். T.P: 0777288731
(3554)

வாசல் திறக்கிறது
**CANADA**
அனுபவம் வாய்ந்த கனேடிய குடிவரவு முகவர்கள் ஊடாக...
Student Visa
O/L or A/L உடன் Diploma / Degree கற்கைநெறி நிறைவில்
தொழில் வாய்ப்புடன் குடியுரிமை (PR)
Express Entry Visa
Degree / Diploma வுடன் 1 வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள்
SIKARAM VISA SOLUTIONS
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1. மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1037 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 20.02.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 22.02.16 Mon@ 4pm.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(சி-3733)

2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்
உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
GUNA BEST PC
CCTV Camera Sale Installation etc.
50/12,Hospital Road, Vairavar Kovil Lane, Jaffna.
கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.



வாழ்த்துவோர்:
(C-3723)
சரா புவனேஸ்வரன் குடும்பத்தினர்
பொதுச் செயலாளர்
இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணம்

ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya
முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.
25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா
Manufactured & Marketed by Jeewaka Herbals No.17/3, wedagedara'Koskandawala yakkala Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621. Contact: 071 227 1526
ஏக விநியோகஸ்தர்கள், சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2567

## "சாதிக்க வேண்...

னம் இரவு உயிரிழந்துள்ளான்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த தனியார் பயணிகள் பேருந்து வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை சடுதியாக மோதி பாரிய விபத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதில் முச்சக்கரவண்டியில் பயணித்த தரம் ஒன்று மாணவன் பா.சுவஸ்திகன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 5 நாட்களாக உயிருக்கு போராடி வந்திருந்த நிலையில் நேற்று முன்தினமிரவு உயிரிழந்துள்ளான்.

சிறுவனது இறுதிக்கிரியைகள் நேற்று மாலை நடைபெற்ற சமயத்தில் யாழ்.நகர் பகுதிகளில் சாரதிகளை விழிப்பூட்டும் வகையிலான துண்டுப் பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அவ் விழிப்பூட்டல் பிரசுரத்தை உயிரிழந்த மாணவனே தவிப்புடன் முன்னெடுப்பதாக வெளிப்படுத்தியிருந்ததனால் பிரசுரத்தை வாசித்த பலரது கண்களும் பனித்துப் போயிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (செ)

## புற்று...

தியட்சகர் வைத்தியர மகிபால ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் கடந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 25ஆயிரத்துக்கு மேற்பட்ட புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவ்வருடத்தில் இதுவரையிலும் 13 ஆயிரத்து 500க்கு மேற்பட்டவர்கள் புற்று நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதுடன் பெண்களிடையே மார்பகப் புற்றுநோய், கருப்பை புற்றுநோய், தைரோட் புற்றுநோய்கள் காணப்படும் வேளை ஆண்களிடையே வாய்ப்புற்றுநோய்,குரல்வளைப் புற்றுநோய், சுவாசப் புற்றுநோய் பொதுவாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.(செ-12)

## எம்.பியானார்...

ரான மறைந்த அமைச்சர் எம்.கே.டி. எஸ். குணவர்தனவின் மறைவு காரணமாக ஏற்பட்டிருந்த பதவி வெற்றிடத்திற்கே சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு இவரது நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியானது.

இதன்படி, நேற்று பிற்பகல் நாடாளுமன்றம் மீண்டும் கூடியபோது சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னிலையில் சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த புதன்கிழமை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி இணைந்து கொண்டது. புதிய கூட்டணி ஒப்பந்தமும் கைச்சாத்தானது.

2010-ம் ஆண்டு ஏப்ரல் நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஜனநாயக தேசிய முன்னணியின் வேட்பாளராக போட்டியிட்டு சரத் பொன்சேகா நாடாளுமன்றத்திற்கு முதற்தடவையாக தெரிவாகியிருந்தார்.

பின்னர், 2011-ம் ஆண்டு நவம்பர் மாதம் நீதிமன்ற தீர்ப்பொன்றின் காரணமாக 3-ஆண்டு சிறைத் தண்டனைக்கு உள்ளானார். இதன்காரணமாக நாடாளுமன்றத்திற்கு செல்ல முடியாத நிலையில் அந்த பதவியை அவர் இழந்திருந்தார்.

2013-ம் ஆண்டில் பொது மன்னிப்பு பெற்று விடுதலையான நிலையில், அந்தப் பதவியை மீளப் பெறுவதற்கு நீதிமன்றத்தை அவர் நாடியிருந்த போதிலும் நீதிமன்றம் அவரது மனுவை நிராகரித்திருந்தது.

புதிய ஆட்சி மாற்றத்தின் பின்னர், கடந்த ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக மீண்டும் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட போதிலும் அவர் தோல்வியை தழுவியிருந்தார்.

அவரது கட்சி போட்டியிட்ட அனைத்து மாவட்டங்களிலும் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைக் கூட வென்றிருக்கவில்லை. எனினும் தற்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராக ஐ.தே. முன்னணி சார்பில் தெரிவு செய்யபட்டுள்ளார். (செ-12)

## காணி அபகரி...

தில் பேரவைத்தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் ரவிகரனால், முல்லைத்தீவு கேப்பாப் பிலவில் உள்ள மக்களின் காணிகளை இராணுவம் பிடித்து வைத்துள்ளது. குறித்த காணியையும் வீதியையும் விடுவிக்குமாறு பிரேரணை ஒன்றை கொண்டு வந்திருந்தார்.

இப்பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக உறுப்பினர் பசுபதிப்பிள்ளை மற்றும் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் ஆகியோரால், வலிவடக்கில் இராணுவம் பிடித்து வைத்துள்ள காணி தொடர்பில் நாம் வழங்கும் முக்கியத்துவம் முல்லைத்தீவில் இராணுவம் பிடித்து வைத்துள்ள காணிகளுக்கு வழங்கப்படுவதில்லை. இவை தொடர்பில் வடக்கு முதலமைச்சர் தீர்க்கமான முடிவெடுத்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றை எழுத வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இதற்கு பதிலளித்து உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் இராணுவம் எவ்வாறு காணிகளை அபகரித்து வைத்துள்ளதோ அவ்வாறே முல்லைத்தீவிலும் அபகரித்து வைத்துள்ளது. தமது காணிகளை இழந்த யாழ்.மக்களுக்கு எவ்வாறான மன நிலையோ, அது போலதான் முல்லைத்தீவு மக்களுக்கும்.

மக்களுடைய காணிகளை விடுவிக்குமாறு அரசிற்கும் இராணுவத்திற்கும் எத்தனையோ தடவைகள் தெரியப்படுத்தி உள்ளோம். ஆனால் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. வடக்கு மாகாணத்தில் இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸார் அபகரித்து வைத்துள்ள தனியார் காணிகள் தொடர்பான அனைத்து விபரங்களும் ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனிடம் கையளித்துள்ளோம்.

இது தொடர்பில் அவர் நல்ல பதிலொன்றை தருவார் என்று நம்புகின்றோம். போர் முடிவடைந்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டது. படிப படியாக இராணுவம் வெளியேற்றப்பட வேணடும். ஆனால் தொடர்ந்தும் இராணுவம் ஏதோ போர்க்காலம் போன்று தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளது. வடக்கில் இராணுவத்தின் தொகையை குறைக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதனையே மனிதவுரிமை ஆணையாளரிடம் வலியுறுத்தினோம் என்றார் அவர்.(செ-4)

## ஐ.நா தீர்மா...

க்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைனை நேற்று கொழும்பில் வைத்து சந்தித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இறுதிக்கட்டப் போரின் போது இடம் பெற்றுள்ள போர்க்குற்றங்கள் உட்பட மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரின் பங்களிப்புடன் கலப்பு நீதிமன்ற விசாரணைக் கட்டமைப் பொன்றை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கடந்த செப்டெம்பர் மாத கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஐ.நா தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு அமைய வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடனான கலப்பு நீதிமன்ற விசாரணைக் கட்டமைப்பை அமைத்து போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தலைமையிலான பிரதிநிதிகள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அது மாத்திரமன்றி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தவும் ஆணையாளர் தம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்றைய சந்திப்பின் போது காணாமல் போனோர், அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் இரர்ணுவம் கையகப்படுத்தி வைத்துள்ள காணிகளை விடுவிப்பது குறித்த விடயங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.(செ-12)

## செங்கோலுடன்...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் சிலர் தம்மை நாடாளுமன்றில் ஒன்றிணைந்த எதிரக்கட்சியாக இயங்குவதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்த நிலையில், அதனை அனுமதிக்க முடியாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதனையடுத்தே மகந்த தரப்பினர் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.(செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.